SUPPLEMENT TO THE "CATHCLIC GUARDIAN

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "GUARDIAN" JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

74-ம் புத்தகம் 34-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு புரட்டாசி மாசம் 1-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## வெள்ளிக் குருசுச் செபமாலை

(முன்தொடர்ச்சி)

உள்ளமேகசிந்து உருகும்படியாகப் பீற்றர் இவ்விதம் கூறியதும் சிறிதுவேளைமூவரும் சித்திரப்பாவைகளைப்போல் அசைவற்று நின்றார்கள். பீற்றர் அதன்மேல் பின்னரும்தொடர்ந்து சொல்லுவான். "நேர்ஸ்! என்னை நல்வழிப்படுத்தியது இந்தச்செபமாலையே; எங்கள் இருவரையும் இன்று சந்திக்கச்செய்ததும் இந்தவெள்ளிக்குருசுச் செபமாலையே; இன்றுகாலை எனது தாயார் தனது செபமாலையை மறதியாக எங்கேயோ வையாதிருந்தால்—இந்தச்செபமாலையை அம்மாவுக்கு நான் இரவலாகக் கொடாதிருந்தால்—ஒருவரைஒருவர் நாங்கள்ஒருபோதுமேசந்தித்திருக்கமாட்டோம்; இப்போது நாங்கள் சந்தித்தபடியால், தங்கள்செபமாலையைத் திரும்பவும் தங்களிடம் நான் ஒப்படைத்துவிடவேண்டும்; அம்மா! அதனை அவவிடம் கொடுத்துவிடுங்கள்."

"இல்லை, இல்லை, தாங்கள்தான் அதை வைத்திருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்."

"உள்ளபடிதான் விரும்புகின்றீர்களா? என்ன அழகான ஒருசெபமாலை......; இப்படியான ஒருசெபமாலை கிடைப்பது அருமை; அதனால் உங்கள்அருமையான இந்தச்செபமாலையை இனிமேலும்நான் வைத்திருக்கப்படாதென்றுதான் எண்ணுகின்றேன்."

"அதைப்பற்றிக் காரியமில்லை; அதை நீங்களே வைத்திருக்கவேண்டுமென்று நான் உள்ளபடியே விரும்புகின்றேன்."

"அப்போநல்லது, நானே அதை வைத்துக்கொள்ளுகிறேன்; ஆனால், ஆஸ்பத்திரியிலே அன்றுநான் செவிகுளிரக் கேட்ட தங்கள்இனிய குரற்தொனியை எனதுஉயிருள்ளவரையும் ஒருநாளுமே மறக்கமாட்டேன்; அவர்கள் நினைத்திருந்தபடி நான் அறிவற்றிருக்கவில்லை; எனதுகரத்தில் இந்தவெள்ளிக் குருசுச்செபமாலையைத் தாங்கள் வைத்ததை நான்உணர்ந்தேன் நன்றாய்; அவர்கள் எனது ஊனக்கண்களை அப்போது இறுக மூடிக்கட்டிவிட்டிருக்க, தாங்களோ நெடுங்காலமாக அந்தகாரத்தால் இறுகமூடிக்கட்டப்பட்டிருந்த எனது ஞானக்கண்ணைத் திறந்துவிட்டீர்கள்; அதனால் தங்களுக்கு எனதுமனமார்ந்த நமஸ்காரம்." இதைக்கேட்ட நேர்ஸ்பிலோமினா மீண்டுமோர்தரம் நாணத்தினால் தலைகுனிந்து ஓர்தரம்நிலத்தை உற்றுநோக்கிவிட்டு ஏதோ பதகளிப்பாள்போல், "நேரமாகிவிட்டது; நான் கந்தோருக்குப் போகவேண்டும்" என்று பரபரப்புடன் கூறினாள்.

பீற்—கந்தோருக்கா! ஏன் இப்போது தாங்கள் ஓர்நேர்ஸ் இல்லையா?

பிலோ—இல்லை. அதுஎனக்குச் சரிவராதபடியால் அதைக் கைவிட்டு, சமீபமாகவுள்ள ஓர் கந்தோரில் இப்போது வேலை பார்த்துவருகிறேன். இப்போது எனது மத்தியானப்போசன ஓய்வுநேரமாகையால் வழமைபோலச் சிறிதுநேரம் செபஞ்செய்துவிட்டுப்போக இந்தக் கோவிலுக்கு வந்தேன்.

சீமா—அப்போ உன்னைச் சுணக்கப்படாதுதான்; ஆனால், தயவுசெய்து உனது விலாசத்தைத் தந்தால்நல்லது; ஒருநாளைக்கு உன்னை எமதுமனைக்கு அழைத்துச்சென்று உபசரித்து எமது நன்றியைப்பாராட்ட ஆசிக்கின்றோம்.

பிலோ—அம்மா! ஓர்கத்தோலிக்கநேர்ஸ் தனதுகடமையையே செய்திருக்கும்போது, அத்துணைபெரும் பிரமாதமாக அதனைக்கொள்வது தகுதியாகுமென்று நான்கருதவில்லை. அதனால் இதுமுதல் அதனை ஓர்மறக்கப்பட்டசம்பவமாக நினைந்து முற்றாக அதை மறந்துவிடுமாறு தங்களைவினயமாக வேண்டுகின்றேன்.

பீற்—மறக்கப்பட்ட ஓர்சம்பவமா? அதனைநான் மறப்பதா? மறந்திருக்கவும் முடியுமா? இல்லை. ஒருபோதும் இல்லை. நேர்ஸ் பிலோமினா என்னும்நாமம் எனது இதயத்தில் பசுமரத்தாணிபோல் நன்றாகப் பதிந்துவிட்டது. இனிமேல்அதனை எவருமே அழிக்கவும்முடியாது. அகற்றவும்முடியாது. தங்கள்மட்டிலே எனக்குள்ள நன்றிக்கடனேபெரிது! ஆனமட்டில் அதனைத்தீர்க்கத்தான்வேண்டும். அம்மா! நீங்கள்சொன்னது முற்றும்சரி. ஒருநாளைக்கு அவவை எங்கள்மனைக்கு அழைத்துச்சென்று விருந்திட்டுஉபசரித்து ஏதோ ஒருசன்மானமும் செய்துவைக்கத்தான் வேண்டும். அம்மாவின் கேள்விக்கிசைந்து தாங்கள் வரத்தான்வேண்டும்.

பிலோ—(சிறுபுன்முறுவலுடன்) அதற்கென்ன. இப்படியெல்லாம் தாங்கள் நல்லெண்ணத்துடன் கேட்கும்போது நான் அல்லத்தட்டுவது சரியல்லத்தான். ஏதோ தங்கள் விருப்பம்போல் ஆகட்டும்.

சீமா—பீற்றர்! நீ கோவிலுக்குப் போகவிரும்பினால் இதோ போய்வா. நேரமாகிவிட்டது. நாங்கள் சமுகமளிக்கவேண்டிய கொண்டாட்டம் ஆரம்பமாக இன்னும் ஒருகால்மணிநேரமே இருக்கின்றது.

பீற்—(உடனே) நேர்ஸ்பிலோமினாவிற்குக் கைகொடுத்து நானும் அம்மாவும் விரைவிலே தங்களைத் திரும்பவும்சந்திப்போமென நினைக்கிறேன். தங்கள் செபமாலையை நானேவைத்திருக்கும்படி விட்டுவிட்டதற்காக ஆயிரம் ஆயிரம் முறை தங்களுக்கு நன்றிகூறுகின்றேன்.

அதன்மேல் பீற்றர் கோவிலை நோக்கி விரைந்துசென்றான். நேர்ஸ்பிலோமினாவும் தனது விலாசத்தை எழுதிக்கொடுத்துவிட்டுச் சீமாட்டியிடம் விடைபெற்றுக்கொண்டு தீவிரமாக நடந்துசென்றாள். செல்லும்போது அவள்சிந்தனைக்கடலிலே பலவித எண்ணங்களும் அலைகளைப்போல ஒன்றின்பின் ஒன்றாய் எழுந்துகொண்டிருந்தன. தனதுவெள்ளிக்குருசுச் செபமாலையைக் கண்டறிந்ததும், தான் செபமாலைகொடுத்த வாலிபரையும், அவர்தாயாரையும் எதிர்பாராதவிதமாகச் சந்தித்ததும், அன்னார்காட்டிய பெருங்குணமும், அந்தவாலிபர் தன்னால் மனந்திரும்பி நல்வழிப்பட்டாரெனச் சொல்லக்கேட்டதும் ஆகியனவெல்லாம் அவள்மனக்கண்முன்பாக ஓர்படக்காட்சிபோன்று பிரதிபலித்துக்கொண்டிருக்கத் தனதுஉத்தியோகதானத்தைப் போயடைந்தாள் நேர்ஸ்பிலோமினா.

இதுநிகழ்ந்து சிலவாரங்கள் சென்றன. ஓர்நாள்ஞாயிற்றுக்கிழமைகாலை பத்துமணி இருக்கும். நகரின்தென்பகுதியிலே நாலாம்குறுக்குத்தெருவில் 36-ம் இலக்கத்தைக்கொண்ட சிறுமனைஒன்றிலே ஓர்இளநங்கை அங்குமிங்குமாக அமைதியாக உலாவிக்கொண்டும், அடிக்கடி வெளிக் கதவண்டைவந்து வீதியைநோக்கிக்கொண்டுமிருந்தாள். அவ்வாறிருக்கும்போது அம்மனையின் முன்பாக ஓர்மோட்டர்ரதம்வந்து மெதுவாகத் தரித்து நிற்க, அதிலிருந்து ஓர்அழகிய வாலிபரும், நடுவயசுள்ள ஓர்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## இஸ்பிரித். திரு. பின்வரும் 13-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(லூக். 17: 11—19)

அக்காலத்தில் யேசுநாதர் எருசலேம்நகருக்குச் செல்லுகையில் சமாரியா, கலிலேயா என்னும் நாடுகளின் நடுவே அவர் போகும்படி நேர்ந்தது. அவர் ஓர் கிராமத்துக்குட் பிரவேசிக்கையில், குஷ்டரோகிகளாகிய பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து தூரத்தில் நின்று: போதகராகிய யேசுவே எங்கள்மேல் இரக்கமாயிரும் என்று உரத்த சத்தமாய்ச்சொன்னார்கள். அவர்களை அவர் கண்டவுடனே: நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அவர்கள் போகும்போதே சொஸ்தமானார்கள். ஆனால் அவர்களில் ஒருவன் தான் சொஸ்தமானதைக் கண்டமாத்திரத்தில் உரத்த சத்தத்தோடு சர்வேசுரனைத் துதித்துக்கொண்டே திரும்பி வந்தான். அவருடைய பாதங்களுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து நன்றியறிந்த தோத்திரஞ் சொன்னான். இவனே சமாரியனாயிருந்தான். ஆதலால், யேசுநாதர் மறுமொழியாகச் சொன்னதாவது: பத்துப்பேரும் சொஸ்தமானார்களல்லவோ? மற்ற ஒன்பதுபேரும் எங்கே? இந்த அந்நியனொழிய வேறொருவனும் திரும்பிவந்து சர்வேசுரனுக்கு துதி செலுத்தக் காணோமே என்று சொல்லி, அவனை நோக்கி: நீ எழுந்து போ; ஏனெனில் உன் விசுவாசம் உன்னைச் சௌக்கியப்படுத்திற்று என்றார். கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

யோசனை: குஷ்டரோகிகள் பத்துப்பேர் குணமடைந்த புதுமையைக் கிறீஸ்துநாதர் பச்சாத்தாப தேவதிரவிய அநுமானத்தின் அடையாளமாகச் செய்தாரெனச் சொல்லவேண்டும். எத்தனையோ முறைகள் ஆண்டவர் நமது நன்றியறியாமையைப் பற்றி முறைப்படக் காரணமாயிருந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதநாயகம் பிள்ளை

## தமிழ் நாவலின் தந்தை

தமிழில்முதன்முதல் நாவல்எழுதியவர் வேதநாயகம்பிள்ளை. அவர்இயற்றிய பிரதாபமுதலியார் சரித்திரம் எனும்நூலே தமிழுலகில் முதன்முதல் தோன்றியநாவல். தற்காலத்திலே தமிழில் எண்ணத்தொலையாத நாவல்கள் மலிந்துகிடக்கின்றன. இவற்றுள்சில நல்லமுறையில் எழுதப்பட்டுள்ளன. இவற்றுடன் பிரதாபமுதலியார் சரித்திரத்தை ஒப்பிட்டுப்பார்த்தால், நாவல் என்றமுறையில், சிற்சில குறைகள் இருப்பது வாஸ்தவமே. இதிலே ஒரு நாவலில் இருக்கக்கூடாத உபகதைகள் பல இருக்கின்றன. தேவாதீனமாக நேரும்சம்பவங்கள் அடிக்கடி கதாநாயகன், கதாநாயகி இவர்களின் இடர்களைத் தீர்த்துவிடுகின்றன. நம்பக்கூடாத சம்பவங்கள்பல இருக்கின்றன. ஆனால், முதன்முதல்தோன்றிய நாவலில் சிற்சிலகுறைகள் இருப்பது இயற்கையே.

மேற்சொல்லிய குறைகள் ஒருபுறமிருக்க, பிரதாபமுதலியார் சரித்திரத்தின் நல்லஅம்சங்களைச் சற்றுஆராய்வோம். பிரதாபமுதலியார் சரித்திரத்தில்தான் தற்காலத்தமிழ்நடை முதன்முதலாக உருஎடுத்திருக்கிறது. அதில் இலக்கியச்சுவை ததும்புகிறது. வாக்கியங்கள் நல்லசொற்களால் தொகுக்கப்பட்டு அவைகளின்கட்டும், அமைப்பும் நேர்த்தியாய் இருக்கின்றன. கடினமானவார்த்தைகள், கொச்சைவார்த்தைகள், உலகவழக்கற்றுப்போன பண்டைநூல்களிலுள்ளபதங்கள் இதில்தேடிப்பார்த்தாலும்இல்லை. வேதநாயகம் பிள்ளையின் தமிழ்வசனநடை இன்றும் மற்றவர்களுக்கு ஒருமாதிரியாயும், வழிகாட்டியாயும் இருக்கிறது.

வெறும் நடைநயத்தால்மாத்திரம் ஒருநூல் சனங்களின்மனதைக் கவர முடியாது. பிரதாபமுதலியார் சரித்திரத்தின் பொருட்செறிவும் போற்றற்குரியது. 77 வருடங்களுக்குமுன் எழுதப்பெற்ற இந்தநூலிலுள்ள கருத்துகள்எல்லாம் முற்போக்குடையனவாயும், தற்காலப்பான்மை பெற்றனவாயுமிருப்பது வேதநாயகம்பிள்ளையின் தீர்க்கபுத்தியையும், சிந்தனைசக்தியையும் காட்டுகிறது. கடவுள்பக்தி, கற்பின் சிறப்பு, ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வியின்அவசியம், ஒழுக்கத்தின் சீலம், நல்லஅரசாட்சியின் இலட்சியம், நீதியின்நேர்மை, நியாயவாதிகளின் கடமை, தாய்மொழிப்பற்று முதலிய பலவிஷயங்களைப்பற்றிக் கதாபாத்திரங்களின் வாயிலாக அவர்வெளியிட்டிருக்கும் திண்ணமானகருத்துகள் செம்மையாயும், பகுத்தறிவுக்குஉகந்தனவாயும், தற்காலமக்களின்மனதைக் கவரக்கூடியமுறையிலும் வரையப்பட்டிருக்கின்றன.

வேதநாயகம்பிள்ளை அவர்கள் இயற்றிய இதரநூல்கள் சுகுணசுந்தரி சரித்திரம், பெண்மதிமாலை, நீதிநூல், சர்வசமய சமரசக்கீர்த்தனை, திருவருள்அந்தாதி, தேவதோத்திரமாலை, பெரியநாயகிஅம்மன் பதிகம், தயாபரக்கண்ணிகள் முதலியன. அவர் பலதனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார்.

இலக்கியவிருந்தெனக் கொள்ளத்தக்க பெண்மதிமாலையில் இரண்டு பாகங்கள்இருக்கின்றன. முதற்பாகம் செய்யுள்வடிவத்தில் பெண்டிருக்குப் புத்திமதிகூறுகிறது. இரண்டாவது பாகம் பெண்கல்வியைப்பற்றிய வியாசமாகும்.

சுகுணசுந்தரி சரித்திரத்தில் கல்விப்பயிற்சி, கடவுளின்தன்மை, சீவகாருணியம், அரசரியல்பு, இல்லறவியல்பு, பரோபகாரம், பொய், மெய், சதிபதிகள்இயல்பு, சுகாதாரவிதிகள், பாலியவிவாகத்தினால் உண்டாகும் கெடுதி முதலியவிஷயங்கள் விநோதசல்லாபமாகப் பிரசங்கிக்கப்பட்டுள்ளன.

1805-ம் ஆண்டுமுதல் 1862-ம் ஆண்டுவரையிலுள்ள உயர்தரநீதிமன்றத் தீர்ப்புகள், திட்டங்கள் முதலியவற்றைச் சுருக்கமாகத் தமிழில்மொழிபெயர்த்துச் "சித்தாந்த சங்கிரகம்" என்றபெயருடன் அச்சிட்டுப்பிரசுரித்தார். அந்நாளில் இது ஆங்கிலத்தில் பயிற்சிஅதிகமாயிராத அநேக வழக்கறிஞர்களுக்கு மிகவும் உபயோகமாயிருந்தது.

### வாழ்க்கை வரலாறு

வேதநாயகம்பிள்ளை 1824-ம் ஆண்டு திருச்சினாப்பள்ளியைச்சேர்ந்த குளத்தூர்என்ற கிராமத்தில்பிறந்தவர். அவ்வூரிலேயே பத்தாவதுபிராயம்வரையில் தமிழ்படித்து, பிறகு திருச்சினாப்பள்ளியில் 'பவுஸ்தாரி மொழிபெயர்ப்பாளர்' பதவியிலிருந்தவரும், ஆங்கிலத்தில் பூரணபாண்டித்திய முடையவருமான திரு. தியாகுப்பிள்ளையிடம் சென்று ஆங்கிலபாஷையைக்கற்றார். இளமையிலிருந்தே இவர் புத்திக்கூர்மையுடன் விளங்கியவராதலால் வெகுசீக்கிரத்தில் ஆங்கிலத்தைக்கற்றார்.

1848-ம் ஆண்டு திருச்சி பிறின்சிப்பல் சதர் அமீன் கோட்டில் 5 வராகன் (17 ரூபா 50 சதம்) சம்பளமுள்ள 'றெக்கோட்கீப்பர்' உத்தியோகம் இவருக்குக்கிடைத்தது. பின்னர் 1850-ம் ஆண்டு திருச்சி டிஸ்திறிக் கோட்டின் 'பவுஸ்தாரி மொழிபெயர்ப்பாளர்' பதவிகிடைத்தது. 1856-ம் ஆண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்ட 'பிளீடர்ஷிப்' பரீட்சைக்குச் சமூகமான சுமார் 80 பேர்களில் வேதநாயகம்பிள்ளையும், சேர் டி. முத்துச்சாமி ஐயரும், திவான் பஹதூர் ஆர். இரகுநாத ஐயரும் தேறினர்.

1857-ம் ஆண்டு வேதநாயகம்பிள்ளை தரங்கம்பாடியில் முனிசீபாக நியமிக்கப்பெற்றார். அடுத்தவருடம் சீர்காழியில் முனிசீபாக இருந்தார். 1859-ம் ஆண்டு இவர் மாயவரம் முனிசீபாக நியமிக்கப்பெற்றார். 1872-ம் ஆண்டு இவருக்கும், அப்பகுதிநீதிபதியாகவிருந்த திரு. நெல்சன் என்பவருக்கும் மனஸ்தாபம்ஏற்பட்டது. அதன்றியும் தேகமும் நலிவுற்றிருந்ததால் இவர் பென்ஷன்பெற்று விலகிக்கொண்டார்.

வேதநாயகம்பிள்ளை சங்கீதஞானமும் உடையவராக விளங்கினார். பிரபல சங்கீதமேதையாகிய கோபாலகிருஷ்ணபாரதியார் வேதநாயகம்பிள்ளையுடன் மிகுந்தநட்புப்பாராட்டிவந்தார். தாதுவருஷத்தில் கொடிய பஞ்சம்ஏற்பட்டு வெகுபேர்பட்டினியும், பசியுமாக வாடியகாலத்தில் வேதநாயகம்பிள்ளை தாமும், பலதனவந்தர்கள் மூலமாகவும் வருந்துபவர்களுக்குப் பொருளுதவிபுரிந்து இன்னும் இதரவழிகளிலும் சகாயம்செய்தார். இந்தப் பரோபகார சேவையைக்கண்டு மகிழ்ந்த கோபாலகிருஷ்ண பாரதியார் "நீயே புருஷமேரு" எனத்தொடங்கும் கீர்த்தனத்தைப்பாடியதாகவும், அவர் வேறெந்தமனிதனையும் புகழ்ந்து கீர்த்தனம் இயற்றியதில்லையென்றும் டக்டர் உ. வே. சாமிநாத ஐயர் கூறியுள்ளார்.

வேதநாயகம்பிள்ளை அவர்கள் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களின் நட்பையும்பெற்றிருந்தார். இவர் வேதநாயகம்பிள்ளையைப் புகழ்ந்து "குளத்தூர் கோவை" என்றொரு பிரபந்தம் இயற்றியுள்ளார். (ச. வி.)

---

—1943-ம் ஆண்டு இந்தியாவிலே நிறுத்தப்பட்டிருந்த ஓர் அமெரிக்க ஆகாயப்படை விமானியான மாட்டின் மொண்ரி என்பவன் ஓர்விமானத்தைத் திருடிக்கொண்டு ஜேர்மனிக்கு வழிபிடித்துச்சென்று அங்கே ஹிற்லரின் காவற்படையிற்சேர்ந்து நாஸிகளுக்குச் சார்பாக ஆகாயவசனிமூலம் செய்திகள் பரப்பிய சதிமானத்திற்காக நியூயோக்நகர் நீதிஸ்தலத்திலே 25 வருடசிறைத்தண்டனையும், 2,500 பவுண் அபராதமும் விதிக்கப்பட்டிருக்கின்றான்.

# நெல் வேளாண்மை

**[பரந்தன் அரசினர் கமத்தில் அனுபவ வாயிலாக அறிந்துகொண்ட நெற்செய்கையைப்பற்றிய பிரதான குறிப்புகள்.]**

(1) அதிகநிலத்தை முறைகேடாக விதைப்பதிலும், குறைந்த நிலத்தைச் சரியான முறையில் விதைப்பதால் கூடியவிளைவையும், அதிகலாபத்தையும் பெறலாம்.

(2) நிலத்தை இடைவிடாமல் தொடர்ந்து விதைப்பதிலும் இரண்டு வருஷத்திற்கு ஒருமுறை நெல்லை விதையாமல் புல் வளரவிடுவது அல்லது சணல், பயறுவர்க்கங்களை உண்டாக்குவது நெல் விளைவைக் கூட்டும் முறையாகும்.

(3) நிலத்தைச் செம்மையான முறையில் பண்படுத்த வேண்டும்.

(4) நெல்லைச் சரியான காலத்தில் விதைக்க வேண்டும்.

(5) நெல்லை ஒரேகாலத்தில் எல்லோரும் வெட்டவேண்டும்.

(6) வயல் வரம்பில் அல்லது வயல் பக்கங்களில் புல் செடிகள் வளர்ந்தால் நெற்பயிருக்கு அல்லது நெற்கதிருக்குக் கெடுதியைக் கொடுக்கக்கூடிய புழுக்கள், வண்டுகள், பூச்சிகள் பெருகிப் பயிரையும், தானியத்தையும் அழிக்கும்.

(7) வயல் வரம்புகள் பெரிதாயிருத்தல் வேண்டும்.

(8) வயல் நல்ல மட்டமாயிருக்க வேண்டும்.

(9) மண்ணுக்கேற்ற பசளையிடல் வேண்டும்.

(10) பசளை அளவிற்கு மிஞ்சிப் பயிருக்கு அதிகரித்தால் பயிர் சண்டல் அடிக்கும்; பல நோய்கள் ஏற்படும்; பூக்கும் காலத்தில் நிலத்தில் விழும்; இவைகளால் விளைவுகுன்றும்.

(11) நிலத்தைச் சிறகு கலப்பையால் உழுவதால் நெல் விளைவைக்கூட்டும்.

(12) நிலத்திற்குத் தகுந்த சாதிநெல்லையே விதைக்க வேண்டும்.

(13) பழுதில்லாததும் கலப்பில்லாததுமான ஏககோத்திர விதைநெல்லையே பாவிக்கவேண்டும்.

(14) நிலத்தைப் பலமுறை உழுது அல்லது உழுது தண்ணீர்கட்டிப் புல்லைஅழித்தால் பயிருடன் புல்முளையாது.

(15) புல்பயிருடன் முளைத்தால் புல் பயிருக்குக் கீழிருக்கும்பொழுது போதியளவு தண்ணீர்கட்டிப் புல்லை அழிக்க வேண்டும்.

இது தவறினால் வயலில் தண்ணீரை நிரம்பக்கட்டிக் கைப்பலகையால் அல்லது முள்ளுக்கலப்பையால் புல்லை அழிக்கவேண்டும். புல்லைப்பயிருக்கு மேல் வளரவிட்டால் களைபிடுங்குவதற்கு அதிக பணச்செலவு ஏற்படும்.

(16) புல் நெற்பயிருக்குள் இருந்தால் நெற்பயிரின் உணவைஉண்டு நெற்பயிரின் வளர்ச்சியைக் குறைத்து அதன் விளைவைக் குறைக்கும்.

(17) முள்கலப்பையால் ஒருமாத நெற்பயிரைக் கிளறினால் விளைவில் 5 அல்லது 6 புசல் நெல் ஏக்கர்ஒன்றிற்குக் கூட்டும்.

(18) நெற்பயிரை நாட்டினால் புல் பூண்டுகள் இல்லாமற் போகும். விளைவில் 10 புசலுக்கு மேல்கூட்டும்.

(19) சாதாரணமானவிதைப்புக்குஉபயோகிக்கும் விதை நெல்லில் காற்பங்கு நாட்டும் பயிருக்குப் போதியதாயிருக்கும்.

(20) நாட்டினால் நெற்பயிர் விதைத்த நெற்பயிரைப்போல் நிலத்தில் விழமாட்டாது. இதனால் விளைவுகூடும்.

(21) நாட்டும்பயிரில் விதைத்தபயிரிலும் பார்க்கக் கூடியமட்டம் வெடிக்கும். கதிரும் பெரியதாயிருக்கும். இவற்றால் விளைவு கூடும்.

(22) பயிர் நாட்டினால் ஒரு கிழமைக்கு நிலம் உலரவேண்டும். அப்போதுதான் மட்டம்வெடிக்கும்.

(23) நெற்பயிருக்குத் தண்ணீர் பிரதானமாயிருந்தாலும் அத்துடன் உஷ்ணமும் அத்தியாவசியம். உஷ்ணமில்லாவிட்டால் தானியவிளைவு குறைவாயிருக்கும்.

(24) இளம்பயிரில் நிலம்காயவேண்டும். பயிரில்நித்தம் தண்ணீர் நிற்பதிலும்பார்க்க ஒருமாதம் அல்லது இரண்டு மாதத்திற்கு ஒருமுறை தண்ணீர்கடத்தி இரண்டு நாளைக்குஆகுதல் பவனசஞ்சாரம் புகவிடல்வேண்டும். இவைகளால் பயிர் கூடியமட்டம் வெடிக்கும். நோய்களும், பயிரைத்தாக்கும் புழுக்களும் பயிருக்குத் தீங்கை விளைக்கமாட்டா. இதனால் பயிரின்விளைவு ஏற்றமடையும்.

(25) நெற்பயிர் பூக்கும் காலத்தில் மழையின்றி உஷ்ணமிருக்க வேண்டும். இவை தவறினால் சப்பி அதிகரிக்கும்.

(26) அயற் கமக்காரருடன் சேர்ந்து ஒரேகாலத்தில் நெல்லைவிதையாமலும், வெட்டாமலும் விடுவதால் நெல்லுக்குத் தீங்குவிளைவிக்கும் பூச்சிகள் பெருகும்.

(27) நெல்லை விதைத்து முடிந்தால் விளையும் என்று இருத்தல் கூடாது. ஒழுங்காய், தேவைக்குத் தகுந்ததாய்த் தண்ணீர் கட்டவேண்டும். பயிரில்லாத இடத்திற்கு நெருக்கமாய்ப் பயிர் இருக்கும் இடங்களிலிருந்து நாற்றுப் பிடுங்கி நாட்டவேண்டும். ஒவ்வொரு வயலின் பயிரையும் நமது பிள்ளையைப் போல் பாவித்து அதற்கேற்ற உணவு கொடுத்தல் வேண்டும். நமது பிள்ளை இளைத்தால் என்ன உணவு கொடுப்போமோ அதைப்போல் பாவிக்க வேண்டும். பயிர் வளராமல் மெலிந்திருந்தால் உடனே மண்ணில் பிடித்துப் பயிரை வளரச்செய்யும் சேர்க்கைப் பசளையாகிய அமோவொஸ்சைப்போன்ற பசளைகளை ஏக்கர் ஒன்றிற்கு முக்கால் அந்தர் வீதம் தூவவேண்டும். பயிர்இளைத்து வருத்தம் பிடித்திருந்தால் கிருஷிகப்போதகரைக் கூப்பிட்டுக்காட்டித் தகுந்த வைத்தியம் செய்விக்கவேண்டும்.

(28) பயிர் விளைந்தவுடன் வெட்ட வேண்டும். இது தவறினால் வெட்டும் பொழுது நெல்லுக் கொட்டுப்பட்டு விளைவைக் குறைக்கும்.

(29) நெல்லை வெட்டி இரண்டு நாள் வெயிலில் காயவிட்டதன் பின்பே சூடு வைத்தல்வேண்டும். ஈரத்துடன் சூடு வைத்தால் நெல் அவிந்துபோகும். அவிந்தநெல்விதைக்கவும்கூடாது. சாப்பாட்டிற்கு உருசியையும் கொடாது.

(30) சூட்டை மிதியாமல் நெடுங் காலம் விட்டால் சூட்டில் நெல்அழியும். பொலிவும் குறையும்.

(31) சுத்தமாய்க் காற்றில் தூற்றி அல்லது புடைத்து வெயிலில் காயவிட்ட நெல்லில் அந்துப்பூச்சி அல்லது வண்டு அழிப்பது குறைவு.

க. தோ. வி.

---

# ருஷியாவின் ஆயுதபலம்

பிரித்தானியஅரசு தனது அரசிறை வருமானத்தில் நூற்றுக்கு 8 வீதமும், பிரான்சியஅரசு தனது அரசிறைவருமானத்தில் நூற்றுக்கு 6 வீதமும் தங்கள் ஆயுதபலங்களுக்கென்று செலவிட, ருஷியசோவியற்அரசோ தனது அரசிறை வருமானத்தில் நூற்றுக்குப் 15 வீதம் செலவிடுவதாகவும், தற்போது சோவியற்அரசு நாற்பதுலட்சம் போர் வீரர்களை ஆயுதபாணிகளாய்க் கொண்டிருப்பதாகவும் ஜெனிவா நகரிலே ஐக்கியநாடுகளின் ஸ்தாபன பொருளாதாரமகாநாட்டில் பிரித்தானிய அரசின் பிரதிநிதியான சேர் கோர்லி சிமித் தெரிவித்திருக்கின்றார். ஐரோப்பாவில் இன்று சந்தேகமற ருஷியாவே மகாப்பெருஞ்சேனையைக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறலாயினர். உலகமக்களிடையே வேலையில்லாப் பிரச்சினையைத்தீர்க்க ஆயுதபலங்களின் செலவைக்குறைப்பதும் உதவியாகும்; ஆனால் இச்சந்தர்ப்பத்தில் அதைக் குறைப்பது இயலாக்கருமமென்றும் அவர் கூறக்காரணம் ருஷியாவின் ஆயுதபலமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென் வின்சென்ற் டீ போல் சபை

யாழ்ப்பாணம் சென் வின்சென்ற் டீ போல்சபைப் பந்திகளின் முதலாம் இரண்டாம் கால்வருடப் பொதுக்கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை (28-8-49) சஞ்சூசையப்பர் கூட்டச் சாலையில் தனிச்சங்க அக்கிராசனர் திரு. R. J. போல் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. சஞ்சூசையப்பர் பந்தி, சந்தியோகுமையோர்பந்தி, சந் நீக்கிலார்பந்தி, உத்தரியமாதாபந்தி ஆதியநான்கும் தத்தம் அறிக்கைகளையும், செலவுவிபரங்களையும் சமர்ப்பித்தன. திரு. J. யேம்ஸ் அவர்கள் அறிக்கைகளைப்பற்றிப் பேசியபொழுது, ஒவ்வொருபந்தியும் தன்தன் காரியஅங்கத்தவர்களின் தொகை அதிகரிப்பதற்கு வேண்டிய வழிவகைகளைக் கையாளவேண்டுமென்று கூறினார். அதன்மேல் தனிச்சங்க காரியதரிசி திரு. P. சவிரிமுத்து அவர்கள் "ஐரோப்பாவும் தருமசபைகளின் தொண்டும்" என்னும் விஷயமாய் இனியதோர் சொற்பொழிவாற்றினர். அதிலே அவர்கூறிய சில குறிப்புகள் வருமாறு :

1833-ம் ஆண்டில் பிறெடெறிக் ஓசாணம் என்பவரை நோக்கி: "உங்கள் தொண்டு எங்கே?" என்று சிலர் கேட்டகேள்வியே சென் வின்சென்ற டீ போல் சபை பரீஸ்பட்டணத்தில் ஸ்தாபிக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தது. இன்றும் அந்தக் கேள்வியையே பிறசமயத்தவர்களும், சமதர்மக்கொள்கையையுடைய மற்றோரும் கத்தோலிக்கரைக் கேட்டுவருகின்றனர்.

இச்சபையின் முழுஇரகசியமும் வறியோரில் யேசுநாதரைக் காண்பதிலே அடங்கியிருக்கிறது. இச்சபையிலுள்ளவொராகிலும் தரித்திரனை யேசுநாதரென்று எண்ணுவிடின் அவருடைய கிரிகை உண்மையாகத் தேவனுக்கு உகந்ததாய் இருக்கமுடியாது.

பின்னர் தாம் லண்டன், பரீஸ், பிறசெல்ஸ், டபிளின் என்னும் நகரங்களில் நடைபெறக்கண்ட இச்சபையின் தொண்டுகளைப்பற்றி விபரித்துக்காட்டினர். லண்டனிலே இச்சபையின் தொண்டுகள் அதிகமாயிருப்பதால் மாதாந்த சம்பளங்கொடுத்து ஓர் காரியதரிசியை அதுநியமித்திருக்கிறது. அங்குள்ள அங்கத்தவர்கள் வறியவர்களுக்கெனப் பணஞ்சேர்ப்பதற்கும், அவர்களுக்கு உதவிபுரிவதற்குமாக அநேக வழிகளில் அயராது உழைத்துவருகின்றனர்.

பரீஸ்பட்டணத்திலேயே சென் வின்சென்ற் டீ போல். சபையின் உற்பத்தியையும், உயிரையும் காணக்கூடியதாயிருக்கிறது. அங்கத்தவர்களைப் பரிசுத்தப்படுத்துமாறு மாதாந்த ஞானஒடுக்கமும், ஞானஉபதேசக் கூட்டங்களும் நடைபெறுகின்றன. தங்களைப் பரிசுத்தமான நிலையில் வைத்திருக்கும் அங்கத்தவர்களே பிறரையும் பரிசுத்ததனத்தில் வளரப்பண்ணக்கூடும் என்னும் கொள்கையே அதன் நோக்கமாகும.

பெல்ஜியதேச பிறசெல்ஸ் நகரிலே இச்சபை ஓர் அனாதசாலையை நடத்திவருவதுடன் இளம்பெண்களை இந்தியா, ஆபிரிக்கா, சீனா, பர்மா, யப்பான் முதலிய தேசங்களுக்கு அனுப்பி வேததொண்டு புரிவதற்குப் பயிற்றியும் வருகின்றது.

டபிளின்நகரிலே சென் வின்சென்ற் டீ போல் சபை மிகவும் ஆர்வத்துடன் தொண்டு செய்துவருவதைக் காணலாம். அங்கு மரியாயின் சேனையும், இச்சபையும் ஒன்றோடொன்று ஒத்துழைத்து ஊருக்கு நன்மைபுரிந்துவருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாய் இருக்கிறது. அங்குதரித்திரரின் நன்மைக்காகப் பல பெரியவேலைகளைச் செய்துவருகிறார்கள். இதன்வழியாக வறியவர்களின் உடல்நலத்திற்கு மாத்திரமன்றி அவர்களின் ஆத்தும நன்மைக்கும் எவ்வளவோ உதவி செய்துவருகிறார்கள். அதன்மேல் மரியாயின்சேனை டபிளின்நகரில் நடத்திவரும் விசேஷ வேலைகளைப்பற்றியும், அவற்றால் இளம்பெண்களுக்கும், வயோதிபருக்கும், அந்தரித்தோருக்கும், இன்னும் பலருக்கும் உண்டாகும் நன்மைகளைப்பற்றியும் விளக்கினார். சென் வின்சென்ற் டீ போல் சபையாரும் அனாதர்மடம், இராவிற்தங்குமடம், நகரதொழிற்சாலை, கத்தோலிக்க மாணவர்களைப் முதலிய பலவற்றில் ஈடுபட்டு மிகவும் திறமையுடன் அவைகளை நடத்திவருவதைக் காண்பது இச்சபையின் முழுநோக்கத்தையும் அறிவதற்கு வழியாயிருக்கிறது.

டபிளின் பொதுச்சபையின் அக்கிராசனர் திரு. E. J. டவ்வி அவர்கள் கூறிய வார்த்தைகளே இவர்களின் ஊக்கத்திற்கும், உற்சாகத்திற்கும் காரணமாகும். அவையாவன : "தரித்திரரில் யேசுநாதரை காண்போமாகில் நாங்கள் இவர்களுக்கு எவ்வளவு உதவிகளைப் புரிந்தபோதிலும் அவைகள் தரித்திரருக்கு மட்டுக்குமேலானவையல்ல." ஈற்றில் திரு. P. சவிரிமுத்து அவர்கள் கூறியதாவது : "தரித்திரரைக் கிறீஸ்துவின் மறுபிறப்பாக நாங்கள் கருதல்வேண்டும். ஏனெனில், "இவர்களில் சிறியவனாகிய ஒருவனுக்குச் செய்ததை எனக்கே செய்தீர்கள் என்று கிறீஸ்துநாதர் கூறினாரல்லவா? இச்சபையை நாங்கள் ஓர் ஏணிபோற் கருதவேண்டும். இந்த ஏணியைக் கொண்டே ஒவ்வொரு அங்கத்தவனும் கிறீஸ்துநாதரிடம் ஏறிப்போகவேண்டும். இவ்வேணியிலுள்ள படிகள் ஆத்துமசுத்தமும், பிறர்சிநேகமுமே. ஆகவே, இச்சபையில் அங்கத்தவர்களாயிருக்கப் பாக்கியம்பெற்ற நாமெல்லோரும் அதன் ஒழுங்குகளைச் சுமுத்திரையாய் அனுசரிக்கவேண்டும். அப்போது உண்மையாகவே நாங்கள் தருமசீலர்களாக விளங்குவோம்." சஞ்சூசையப்பர்பந்தி உபஅக்கிராசனர் திரு. M. சவிரிமுத்துஅவர்களும் உத்தரியமாதாபந்தி அக்கிராசனர் திரு. M. அருளானந்தம் அவர்களும் சபையின்போரால் தனிச்சங்க காரியதரிசிக்கு நன்றித்துதி கூறினார்கள். அக்கிராசனரின் குறிப்புகளின்பின் வழமையான செபத்துடன் கூட்டம் நிறைவாயிற்று.

தேசீய கீதம்

## யாழ்ப்பாணம்

— அழது —

பல்லவி

என்றும்புகழ் குன்றாநாடு—எங்கள்
இன்தமிழ் நாடு

சரணங்கள்

1

கலையினிலே புகை யிலையினிலே—சீரி
மலையினிலே அன்பு நிலையினிலே [றும்
சிலையினிலே சிற்பக் கைத்திறன் தோன்
சிறப்பினிலே உயர் நாடு

2

பாவினிலே கனி மாவினிலே—நறும்
பூவினிலே உண்மை நாவினிலே
காவினிலே குயில் பாடித்திரியும்
களிப்பினிலே உயர் நாடு

3

சோலையிலே தொழிற் சாலையிலே—பன்ன
வேலையிலே கல்விச் சாலையிலே
மாலையிலே முல்லைப் பூக்களரும்ப
மகிழ்வதிலே உயர் நாடு

4

தெங்கினிலே கடற் சங்கினிலே—பனை
நொங்கினிலே கலைப் பங்கினிலே [திட
எங்கினியே காண்போம் என்று புகழ்ச்
சதலிலே உயர் நாடு

5

பண்ணினிலே பயில் எண்ணி னிலே—வள
மண்ணினிலே ஞானக் கண்ணினிலே
விண்ணினிலே கனி வெள்ளம் தெரிக் திடும்
வித்தையிலே உயர் நாடு.

இராகம்: இந்துஸ்தானி தோடி
"பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள் பாரத நாடு" என்ற பாரதிபாடலைப் போல் எழுதப்பட்டது.

## ரூபா 25 இனம்!

பிலோமினா—12 வயது. இந்திய தமிழ்ப் பெண். ரோமான்கத்தோலிக்க வேதம். பொதுநிறம், நல்ல மொத்தமான தேகம். 4 அடி உயரம், மயிர் வெட்டியிருக்கிறது. வெள்ளைப்பாவாடை, அச்சடியன் சட்டையுடன் 28-8-49 காலை தொடக்கம் காணவில்லை. காண்போர் கீழ்கண்ட விலாசத்துக்கு அறிவிக்கவும்.

S. யேம்ஸ்
Dr. Subramaniam's Dispensary,
Beach Road, Jaffna.

## மீன்பிடிபகுதித் தலைவரின் மன்னார்ப்பகுதித் தரிசனை

மீன்பிடிபகுதித்தலைவர் திரு. சி. அமிர்தலிங்கமவர்கள் மன்னார்ப்பகுதி மீன்பிடி தொழிலாளரின் நிலைமைகளைப் பார்வையிடுவதற்காக 17-8-49 காலை, பகுதிமீன்பிடிதொழிற்சங்க பரிசோதகர்களான திரு. கே. சோமசுந்தரம், திரு. டி. எஸ். திருபாலசிங்கம் என்பவர்களைத் துணைக்கொண்டு மன்னார் மீன்பிடிசங்கக் கந்தோரையும், ஸ்ரோறையும் பரிசோதனை செய்தபின் பிற்பகல் இலுப்பைக்கடவைசென்று கரையோர நிலைமையையும், தொழிலாளர் நிலைமையையும் பார்வையிட்டனர்.

பின் திரு. சோமசுந்தரமவர்களின் உதவியோடு புதிதாக ஆக்கப்பட்ட விடத்தல்தீவு மீன்பிடிசங்கத் தலைவரால் மாலைசூட்டி வரவேற்கப்பட்டுத் தலைமைதாங்கியபோது : சங்கத்தலைவர், பொக்ஷாதிபர், பரிசோதகர் என்பவர்களால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகட்குப் பதில்கூறுகையில் : மருந்து உங்கள் கையிலுண்டு; அரசாங்கம் உங்களுக்குப் போதிய சலுகைசெய்யும்; நீங்கள் முயற்சிகொண்டுழைத்தால் போதிய பயனை அடைவீர்களெனக் கூறிமுடித்தார்.

அதன்மேல் பரிசோதகர் திரு. சோமசுந்தரமவர்களின் துணையோடு புதிதாக ஆக்கப்பட்ட பள்ளிமுனை மீன்பிடி சங்கத்துக்குச் சமுகங்கொடுத்து, சங்கத்தலைவரால் மாலைசூட்டி வரவேற்கப்பட்டுக் காரியதரிசியின் சிலகேள்விகட்குச் சமாதானம் கூறியபின், அவ்வூர்ப் பட்டினசங்க அங்கத்தினர் திரு. டானியேல் றோச் அவர்கள் எழுந்து, இடித்த உப்பாகப் பெற்றுக்கொள்ளும்போது அந்தருக்கு மேலதிகமாய் 50 சதமென்றிருப்பதை 40 சதமாக்கினால் நல்லதென்றும், கார்த்திகை, மார்கழி போன்ற மாரிகாலத்திலே தொழிலாளர் உணவுக்குவழியின்றித் திண்டாடுவதால் புதிய வருடத்தில் மலேரியாக் காய்ச்சலால்வருந்தநேருகிறதென்றும், அவ்வேளை அரசாங்கத்தின் சகாயம் கிடைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

மீன்பிடி பகுதித்தலைவர் பதில்கூறியபோது : தொழிலாளருக்கு உணவுக் கஷ்டமான காலத்தில் பணமாகவல்ல உணவாக உதவிபுரிவதற்குரிய திட்டம் ஒன்று தயார்பண்ணிக் கொடுத்திருக்கிறோம்; அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் அதுகெதியில் அமுலுக்குவரும்; வியாபாரிகளின் கடன்சிக்கலிலுள்ள அங்கத்தினரை அரசாங்கம் விடுவித்துவிட்டால் இனிமேல் அப்படியான நிலைமையில் சிக்கிக்கொள்ளாமலிருப்பதோடு சங்கஒழுங்குகளுக்கும் அமைய நடக்கலாமெனக் கூறிமுடித்தார்.

18-8-49 காலை அரிப்புக்கரையோரங்களையும், தொழிலாளரின் வாழ்க்கை முறைகளையும், தொழில் நிலைமையையும் விசாரணைசெய்தபின் பேசாலை சென்று சம்மாட்டிமார் பலரையும் கண்டுபேசியபின் தோட்டவெளியில் புதிதாக நடந்துகொண்டிருக்கும் ஐஸ் மோள் கட்டிடத்தைப் பார்வையிட்டுக்கொண்டு எருக்கலம்பிட்டி சென்று அங்கு நடந்த மீன்பிடிசங்கத்திலே மாலைசூட்டி வரவேற்கப்பட்டுத் தலைமைவகித்துத் திரு. சோமசுந்தரமவர்களால் "சங்கத்தின் நிலைமை" என்ற விஷயமாக நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு முடிந்ததும் சங்கவிஷயம்பற்றியும், சங்குகுளி விஷயம்பற்றியும் கலந்துரையாடியபின் மன்னார்சென்று அன்றிரவே கொழும்புநோக்கிப் பிரயாணமானார்.

—நிருபர்

## "உப்பிட்டவரை..."

ஒருநாள் என்தங்கை லீலா காலைச் சிற்றுண்டிக்கு உப்புமாசெய்து வைத்திருந்தாள். அப்பப்பா! அதில் ஒரே உப்பு. "என்ன லீலா, உப்புமாவில் ஒரேஉப்பாக இருக்கிறதே!" என்றேன் நான். "அண்ணா, இதற்குப் பெயரே உப்புமா அல்லவா? இதில் உப்பில்லாமல் சர்க்கரையாஇருக்கும்!" என்றாள் மிகத்துணிவாக.

"ஆமாம் லீலா, உப்புமாத்திரமல்ல இது வேகாமல் மாவாகவும்தானிருக்கிறது. பெயர் சரிதான்" என்றேன் நான் சற்றுத் துடுக்காக.

"அண்ணா, உப்பிட்டவரை உள்ளளவும்நினை என்ற பழமொழி உங்களுக்குத்தெரியாதா? நீங்கள் என்னைநினைத்துக் கொள்வதற்காகத்தான் உப்புமாவில் அதிக உப்புப் போட்டேன்!" என்றுகூறி என்வாயை அடைத்துவிட்டாள் என்தங்கை.

"உப்பில்லாப் பண்டத்தைக் குப்பையிலே போடு" என்று சொன்ன அனுபவசாலி, உப்பு அதிகமாயுள்ள பண்டத்தை என்ன செய்வதென்று சொல்லாததனால் வேறு வழியின்றி உப்புமாவை வயிற்றில் போட்டுக் கொண்டேன்.

உப்பைஎவ்வளவு உயரியஉவமையில் யேசுநாதர் உவமித்துக் காட்டுகிறார். பாருங்கள்: "நீங்கள் உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதனால் இனி அதுசாரமாக்கப்படும்? வெளியே எறியப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது"

ஆம்; உலகத்தில் நாம் மிகவும் பயனுள்ள மக்களாயிருக்க வேண்டுமென்பதே யேசுநாதர் காட்டிய உப்பு உவமையின் உயரியநீதி. நாம்உப்பைப் போல் உலகத்தில் உபயோகமுள்ளவர்களாயிருக்க எவ்வளவோ இன்னல்களைச் சகிக்கத்தான் வேண்டும். உப்பு நீருக்குப் பயந்துகொண்டிருந்தால் எங்ஙனம் விலைஉயர்ந்த முத்து எடுக்க முடியும்?

உப்பு நமது உடலுக்கு இன்றியமையாதது. உப்புக்குறைந்துபோனாலும், அதிகமானாலும் நமக்கு நோய்வந்துவிடும் என்பது வைத்தியர்கள் ஒப்புக்கொண்ட உண்மை. "ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மை பேசி உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும்" என்ற அமுதமொழி—உளங்கனிந்த மொழி உப்பின்மேன்மையையும், அதன் பெருமையையும் ஓரளவு உணர்த்திக் காட்டுகிறது. உப்பு என்பதற்கு 'இனிமை' எனும் பொருள் உள்ளது. கூடலில் தோன்றும் இனிமையை உப்பு என்று உரைக்கிறார். வள்ளுவப்பெருந்தகை.

"ஊடிப்பெறுகுவங் கொல்லோ
நுதல் வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு"

பாலுக்குச்சர்க்கரை இல்லையென்று கவலைப்படுகிறானே அந்தப்பணக்காரன். அவன் கவலையைப்பார்த்து ஏளனப் புன்னகை புரிகிறேன் நான். ஆனால் கூழுக்கு உப்பு இல்லையென்று கவலையுறுகிறானே என் சகோதர மனிதன். அவனது தீனக்குரலைக்கேட்டு உளங்கனிந்து கண்ணீர் விடுகிறேன். நான் பணக்காரனது தங்கப் பேலாவில் சர்க்கரையாக இருக்க விரும்பவில்லை. ஆனால், ஏழையின் மட்கலயத்திலே என்றும் உப்பாகஇருக்க ஆசிக்கிறேன்.

( கலைமலர். )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தாத்திரைமாதா திருநாள்

### சாட்டி — வேலணை

இத்திருநாள் வழமைபோல 12-9-49 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 24-9-49 சனிக்கிழமை பாடற்பூசையுடனும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவுபெறும். இவ்வருடம் கடைசி இரவு வேஸ்பரும், திருநாள் பாடற்பூசையும் கோயில்முகப்பில் புதிதாகக் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் மண்டபத்தில் நடாத்தப்படும்.

கட்டளைக்குரு.

## திருநாள் அட்டவணை

1949-ம் ஆண்டு புரட்டாசி மாசம்

| | | |
|---|---|---|
| வெ | 2 | அர்ச். முடியப்பர், இ. |
| சனி | 3 | அர்ச். செருப்பியம்மாள் |
| ஞா | 4 | இஸ்பி. ஆகமனத். பின்வரும் 13-ம் ஞாயிறு—அர்ச். ரோசம்மாள், க. |
| திங் | 5 | அர்ச். யுஸ்தினியானு லவுரேஞ்சியார், மே. |
| செ | 6 | அர்ச். ஒனெசிப்போர், வே. |
| புத | 7 | அர்ச். இரெஜினம்மாள், க. வே. |
| வி | 8 | தேவமாதா பிறந்த திருநாள். |

சத்தியவேத
பாதுகாவலன்
1949-ம் ஆண்டு
புரட்டாசி மாசம் 1-ந் திகதி

## போலாந்து

இரண்டாவது உலகயுத்தத்தாலே போலாந்துதேசம் தனது விஸ்தீரணத்தில் குறைந்தபோதிலும், தனது வேதவிசுவாசத்தில் குறைந்துபோகவில்லை. அதனால் ஐரோப்பாவிலே பெரும்பான்மையினரான மக்களைக் கத்தோலிக்கராகக்கொண்டுள்ள பெரிய கத்தோலிக்க நாடுகளில் அதுவும் ஒன்ருக இன்றைக்கும் திகழுகின்றது. ஆயினும் நாஸ்திக சோவியற்அரசின் இரும்புத்திரையுள் அகப்பட்டுக்கொண்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அதுவும் ஒன்ருகலின் அங்கும் பொதுவுடைமை அரசாங்கம்ஒன்று தலையெடுத்துக் கத்தோலிக்க திருச்சபைக்குப் பெரும் இடுக்கண்கள் விளைத்துவரலாயிற்று. கடைசியாக இப்போது, அக்காலத்திலே திருச்சபையை வேரோடுகளைந்து விடுவான் பயங்கர வேதகலாபனைகள்நடாத்திய நீரோ,ஜூலியன், தியோக்கிளேசியன் முதலாம் கொடுங்கோல் மன்னர்களைப்போல அதுவும் போலாந்திலே திருச்சபையைக் குழிதோண்டிப் புதைத்துவிடுவான் முனைந்து இடுதண்டம் பிடிதண்டமான போக்கிலெழுந்து அதற்கு மாருகப் பதினேழு புதிய கட்டளைச்சட்டங்களைச் சென்ற ஆவணி மாதம் 6-ந் திகதியன்று பிறப்பித்திருக்கின்றது. இந்தக் கட்டளைச்சட்டங்களை ஆராய்வாகக் கவனிக்குமிடத்து இரும்புத்திரை மறைவில் திருச்சபையை எதிர்த்துச் செய்யப்படும் மகாதந்திர சாதுரியமும், பிராணபாயமுமான தாக்குதல் இதுவாகுமெனச் சொல்லப்படுகிறது.

இந்தச் சமய விரோதமான கொடிய சட்டங்கள் போலாந்திலே தனது கட்டுக்கடங்காத மேற்றிராணிமாரையும், குருமாரையும், மற்றேனையோரையும் சிறைத்தண்டனையோ அன்றேல் மரணதண்டனையோ விதித்துத் தண்டிப்பதற்கான கூடிய அதிகாரங்களைப் பொதுவுடைமை அரசாங்கத்திற்குக் கொடுத்துத் திருச்சபையை வருங்காலத்திலே எல்லாவழியாலும் தாக்குதற்கான வழியைத் திறப்பனவாகும். அதனால் போலாந்த திருச்சபை அதிகாரிகள் இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டிய ஓர் சந்தர்ப்பத்தை இச்சட்டங்கள் அளிக்கின்றன. ஒன்றில் அவர்கள் வத்திக்கானின் செல்வாக்கையும், தொடர்பையும் கைவிட்டுத் தற்சமையம் போலாந்தில் ஆட்சிநடத்துகின்ற பொதுவுடைமை அரசாங்கத்திற்குப் பணிந்து, அதன் கேள்விக்கிசைந்து, அதற்குப் பிரமாணிக்கமுள்ள ஓர் சபையை அங்கே ஏற்படுத்தவேண்டும். அன்றேல் தங்களுக்கு வரக்கூடிய எந்தவிதமான நிர்ப்பந்தங்களுக்குமே அஞ்சாது, எதற்குமே அடிபணியாது அரசாங்கத்தை எதிர்த்துத்தீர வேண்டும். பொதுவிலே கூறுமிடத்து, போலாந்துதேச திருச்சபைஅதிகாரிகள் பாப்பரசரின் தலைமையை என்றும்போல அங்கீகரிப்பதா? அன்றேல் தங்களுக்கென வேருன ஓர் சபையை ஆக்கிக்கொள்வதா? என்று முடிபுகட்டவேண்டும்.

இன்று போலாந்தை ஆட்சி செய்துவருகின்ற நாஸ்திக தலைவர்கள் பதினொருபேரும் தங்கள் இஷ்டம்போல அங்குதிருச்சபையை மடக்கிவைப்பதற்கென ஆக்கிக்கொண்ட அடக்குமுறைச்சட்டங்களை ஆயுதமாகக்கொண்டு சமயப்போர்தொடக்கியிருக்கின்றனர். அச்சட்டங்களின்படி, மேற்றிராணிமாரோ, அன்றேல் குருமாரோ எவராவது எங்காவது அவர்களின் நாஸ்திக பொதுவுடைமைப் பிரசாரத்தை எதிர்க்கப்படாது. அவர்களின் நாஸ்திகசம்பந்தமான முயற்சிகளை எதிர்த்துப்பேசவோ, அன்றேல் அவர்களின் எதிர்கால கொள்கைகளில் எதற்குமே மாருகப் பொதுசனஅபிப்பிராயத்தைத் தெரிவிக்குமாறு பகிரதப்பிரயத்தம் எதுவும்செய்யவோ துணியப்படாது. அல்லவென்று எதிர்க்கிறதாயிருந்தால், பேசுகிறதாயிருந்தால், துணிகிறதாயிருந்தால், அவர்களின் சட்டங்களை மீறுவோராகித் தண்டனைக்குள்ளாவார்கள். இவ்வாருன பல அடக்குமுறைகளையும் பொதுவுடைமை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாலே ஹங்கேரியிலும், செக்கோசிலோவாகியாவிலும்போல அங்கேயும் திருச்சபைக்குப் பெருஞ்சோதனைகாலம் வந்திருக்கிறது.

போலாந்தில் 2 கோடியே 20 லட்சம் கத்தோலிக்கர் இருக்கின்றனர். இவர்கள் ஆழ்ந்த வேதவிசுவாசம் உடையவர்கள். தங்கள் வேதவிசுவாசத்திற்காக உயிரைத்தானும் தியாகஞ்செய்ய வேண்டிவரினும் பின்வாங்கமாட்டார்கள். அங்கு பொதுவுடைமை அரசினர் விடுத்திருக்கும் வேதவிரோத கேள்விகளுக்குத் தங்கள் மேற்றிராணிமார்கூடி ஆலோசித்துக் கொடுக்கவிருக்கும் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றார்கள். அவர்களின்பதில் என்னவாயிருக்குமென்று எடுத்துக்கூறவேண்டியதில்லை. என்றாலும் அதைக்கேட்கிறவரையில் அமைதியாயிருக்கின்றார்கள். இந்தப்பதில் வெளியானதும் போலாந்திலே நிச்சயமாக ஓர் பயங்கர வேதகலாபனையோ அன்றேல் தேசகலகமோ ஏற்படுமென்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம். வேதகலாபனைஏற்படுமானால் கத்தோலிக்க போலாந்தும் செம்பொன் உலையில் சுத்தமாவதுபோல் புனிதமும், மறுமலர்ச்சியுமுற்றுப் பிரகாசிக்குமென்பதில் சந்தேகமில்லை.

## சுதேச வர்த்தமானம்

### கல்லூரி ஆரம்பம்

மத்தியவேனிற்கால விடுமுறை முடிந்து சம்பத்திரிசியார் கல்லூரி நிகழும் புரட்டாசிமாதம் 6-ந்திகதியாகிய வருகிற செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

### புதியநேர அட்டவணை

வடபாக றெயில்வேயிலே பிரயாணிகளின் வசதியையிட்டு றெயின்வண்டிகளின் போக்குவரத்திலே நேரமாற்றங்கள் சிலசெய்யப்பட்டுச் சென்ற 29-ந் திகதி திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வந்திருக்கின்றன. அவற்றின்படி கொழும்பிலிருந்து காலை 7-20 மணிக்குப் புறப்பட்டுக் காங்கேசன்துறைக்குவரும் பகல்றெயினும், காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டுக் கொழும்புக்குச் செல்லும்இராத்தபால் றெயினும் யாழ்ப்பாணத்திற்குப்பதில் நாவற்குழியிலே ஒன்றையொன்று கடந்துசெல்லும்.

புதிதாக ஓர் றெயின் பிற்பகல் 7 மணிக்கு நாவற்குழியிலிருந்து புறப்பட்டு 7-48 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து பின்னர் 8-30 மணிக்குக் காங்கேசன்துறை போய்ச்சேரும்.

காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 5-40 மணிக்குப் புறப்படும் இராத்தபால்றெயின் 6-40 மணிக்கு யாழ்ப்பாணம்வந்து பின்னர் 8-25 மணிக்குப் பளையையும், தற்போதிலும் 15 நிமிஷம் முந்தி 12-05 மணிக்கு மதவாச்சியையும் போய்ச்சேரும்.

வழமையான உத்தியோக றெயின் காலை 7-47 மணிக்குக் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு 8-35 மணிக்கு யாழ்ப்பாணம் வந்துசேரும். பாடசாலைப்பிள்ளைகள், மற்றும் கந்தோருக்குப்போகிறவர்களின் வசதியையிட்டுத்தான் இந்த றெயினின்பிரயாண நேரத்தில் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை பிற்பகல் 6 மணிக்குக் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டுவந்த றெயின் தற்போது 15 நிமிஷம் முந்திப்புறப்பட்டுவருகிறது.

காங்கேசன்துறைக்கும், யாழ்ப்பாணத்துக்குமிடையே ஓடுகின்ற றெயில்கார்கள் நேரம்முந்தி ஓடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதனால் சுன்னாகத்திலுள்ள தச்சுத்தொழிற்சாலைக்கும், காங்கேசன்துறையிலுள்ள சிமெந்துத் தொழிற்சாலைக்கும் செல்லுகின்ற தொழிலாளர்களின் பிரயாணவசதியையிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6-53 மணிக்குப் புதிதாக ஓர் றெயின் புறப்படுகின்றது. இது 7-45 மணிக்குக் காங்கேசன்துறைபோய்ச் சேருகின்றது. ஆனால் புதிதாக றெயின்ஒன்றும் யாழ்ப்பாணத்தில் ஓடவைக்கப்படவில்லை. அதற்குக்காரணம் எஞ்சின்கள் பெட்டிகளின் குறைவேயாம்.

### சீமேந்துத் தொழிற்சாலை

காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலைப் பிரதமஇஞ்சினீயரான திரு. டபிள்யு. ஏ. எம். பேட்ரன் அவர்கள் உத்தியோக பதவியிலிருந்து விலகியதாலே அத்தொழிற்சாலை சிறிதும்பாதிக்கப்படவில்லையென்றும், முன்னிலும் அதிகம்துரிதமாக அதிலே வேலைநடைபெற்று வருகிறதென்றும், நிகழும் 1949-ம் ஆண்டு முடிவதற்கிடையில் அத்தொழிற்சாலையில் சீமெந்துசெய்யும்வேலை ஆரம்பமாகிவிடுமென்றும், கைத்தொழில் மந்திரியார் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் தெரிவித்திருக்கின்ருர். திரு. பேட்ரன் அவர்கள் விலகியதாலே சீமெந்துத்தொழிற்சாலையில்சமீபகாலத்தில் சீமெந்து செய்யப்படமாட்டாதெனப் பரந்தசெய்தியானது யாழ்ப்பாணத்திலே சீமெந்தின்விலையைஏற்றிவிட்டதென்று சொல்லப்படுகிறது.

### பர்மாக் குறுனல் அரிசி

பர்மாவிலிருந்து இலங்கையில்வந்து இறக்குமதியாகும் அரிசியிலே குறுனல்அரிசியும் சேர்ந்திருப்பதால் 1 கோடியே 40 லட்சம் ரூபா தமக்கு நஷ்டம் ஏற்படலாமென நமது அரசினர் எண்ணுகின்றனர். சர்வதேச உணவுச்சங்கம் இலங்கைக்குப் பங்கிடு செய்திருக்கும் அரிசியிலே 2,25,000 மூடை குறுனல் அரிசியும் இலங்கைக்குக் கிடைத்திருக்கிறது. இந்த அரிசியை அனுப்பவேண்டாமென்று நமதுஅரசினர்எத்தனையோமுறைகேட்டும் பலன் ஏற்படவில்லை. இந்தக்குறுனல் அரிசி பிட்டு, அப்பம், இடியப்பம், பாற்சோறு ஆதியவற்றிற்கே உதவுமாம். இந்தஅரிசியைக் கூப்பன்அரிசியாகக் கொடுத்தால் சனங்கள் ஆட்சேபிப்பார்களேயென்றும் அரசினர் ஓர்பால் அஞ்சுகின்றனர். மறுபால் ஒருமூடை 62 ரூபா 50 சத வீதம் கொள்விலைக்கே வியாபாரிகளுக்கு விற்றுவிடலாமென்ருல் அவர்களும் வாங்கமறுக்கின்றனர். இன்னும் ஆறு மாதம் சென்ருல் இந்த அரிசி பாவனைக்கு தவாமற்போய்விடும்.

### விலைப்படாதிருக்கும் சோளம்

இலங்கையிலே விளைவிக்கப்பட்டு அரசாங்க விற்பனவுப்பகுதியால் வாங்கப்பெற்ற நாற்பதினாயிரம் புசல் சோளம் வாங்குவாரின்றிக் கிடக்கின்றது. இந்தச்சோளத்தை அரசினர் புசல் ஏழு ரூபா வீதம் வாங்கினர். இதுவரை 2,80,000 ரூபா பெறுமதியான சோளம்வாங்கப்பட்டிருப்பினும், இது விலைப்படாதிருப்பினும் இன்னுமே வாங்கப்பட்டு வருகிறது. இதனை விளைவிப்பாருக்கு ஊக்கம் அளிக்குமாறே இதுவாங்கப்படுகிறது. வாங்கிய சோளம் மூன்று மாதங்களுக்குமேல் இருப்பிற்கிடப்பினும் இன்னுமே கெட்டுப்போகவில்லை. இந்தியாவுக்கு விற்கலாமென்ருல் பாட்டுவிலை கேட்கப்படுகிறதாம்.

### செத்தல்மிளகாயின் விலை

தற்போது இந்தியாவிலிருந்தும், கிழக்கு ஆபிரிக்காவிலிருந்தும் மாதம் ஒன்றுக்குச் சுமார் 900 தொன் செத்தல்மிளகாய் இலங்கையில்வந்துஇறக்குமதியாகின்றது. இந்த மிளகாயை இங்கு ஏற்றுமதிசெய்கிறவர்கள் இதன் விலையை ஏற்றிவிட்டமையால், இங்கு அதன்விலைஅரைவாசிக்குமேல்ஏறிறுத்தல் 1 ரூபா 60 சதமாகிவிட்டது. வருடம்ஒன்றுக்கு இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் செத்தல்மிளகாய் ஏறக்குறைய 3,000 தொன் மாத்திரமே. இது வட, வடமத்தியமாகாணங்களில் தான்செய்யப்படுகிறது. இதுவிஷயமாய் பிறநாடுகளிலே இலங்கை அதிகமாகத் தங்கியிராதபடி மட்டக்களப்பிலே பெருந்தேசப்பரப்பில் சிவப்புமிளகாய் செய்கைபண்ணுதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தற்போது சுமார் 5,600 ஏக்கரிலேயே மிளகாய்ச்செய்கை நடக்கின்றது. இதைப் 10,000 ஏக்கர் ஆக்குதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசின் மறுதோற்றம்

## அந்தச் "சதிகாரர் யார்?"

'தமிழ்முரசு'

ஐயா! "இந்துசாதன"த்தில் தோன்றிய "தமிழரசு" என்பாரிடம் "சதிகாரர் யார்?" என்று யான் பொறித்த வினாவிற்குச் சென்ற 26-8-49-இல் வெளியான 'சாதன'த்தில் அன்னார் விடையாக மற்றொன்றுவிரித்தும், பதர்மொழிகள் இழிமொழிகளைப் பிரயோகித்தும் "மந்திரமறியான்பூசை விடிய விடிய" என்றவாறாய், பத்திபத்தியாய்ப் பெரும்பாரதம் ஒன்று எழுதிவிட்டிருப்பது மிகவும் வேடிக்கையாகவிருக்கின்றது. "வீண்விவாதத்திலிறங்க ... விரும்பாவிடினும் ... கோழைகளாகப் பதுங்குவது" என்று அவர்வரைவதிலிருந்து, இது வீண்விவாதம்; இதிலிறங்கத் தாம்விரும்பவில்லை; என்றாலும் கோழைகளாகப் பதுங்குவது தாமலலவென்று தான்விரும்பாத ஓர் வீண்விவாதத்தில் தானாக இறங்கியதாகத் "தமிழரசு" சகலருமறிய ஒப்புக்கொள்ளும்போதே "சும்மாவிருந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி" என்ற சுலோகம் அவருக்கே சாலவும் பொருத்தமாகுமன்றோ!

"அன்னியசமய சன்னதங்கொண்டு அடியேன் அதனை எழுதவில்லை" என்று வரைகிறவர் அடிக்குள்ளேயே தான்எழுதியதை மறந்து, (சைவத்) தமிழருக்குக் கிறீஸ்தவதமிழர்களா வழிகாட்டவேண்டும்? என்றும் "அதைக்கேட்டுக்கொண்டிருக்கச் சைவத் தமிழனுக்குப் பொறுக்குமா?" என்றும் எழுதும்போதே, சத்தியமாக அன்னியசமய சந்நதங்கொண்டு தான்அதை எழுதவில்லையென அவர் சொல்வதை ஆர்தானும் ஒப்புக்கொள்ளமுடியுமா? சொல்லுவார்சொன்னால் கேட்பார்க்கு மதியில்லையா? இன்னும் "அன்னிய இரத்தக்கறைபடிந்த துரோகமதம்" என்றும் "பிறிம்பான ஆட்டுமந்தை" என்றும் முன்னர் இழிவாக வரைந்த "தமிழரசு" பின்னர் "அன்னியர்களையோ, அவர்கள்மதத்தையோ நாம் குறைகூறுவதால் பயனில்லை" என எழுதியிருந்ததையும் சற்றே தனது ஞாபகத்தில் வைத்துக்கொள்வாராக.

அத்துணை பெரும் நெஞ்சத்துணிவோடு — அஞ்சாத் துணிவோடு "ஆராய்ச்சிக்கு எட்டாத ஆதியையுடைய அரும்பெரும் மதமான சைவத்தை அடகுவைத்த" சண்டாளர், சதிகாரர் யாரென்று யான்வினவியதற்குத் "தமிழரசு" விடையாக "இந்தக் கேள்விக்கு விடை அனுவசியம்" என்றும், "சரித்திர அறிவு—ஆராய்ச்சி அறிவு இல்லாதவர்கள் வீண்பிதற்றலில் இணங்குவது வழக்கம்" என்றும் மழுப்பிவிட்டிருப்பதிலிருந்து தானே அந்தவழக்கத்தை இப்போது மேற்கொண்டு வீண்பிதற்றலில் இணங்கியதாகவும், தான் சரித்திர அறிவு—ஆராய்ச்சி அறிவு இல்லாதவராகவும் காட்டிக்கொள்வது சாலவும் வியக்கற்பாலதே!

"தேசத்தைக் காட்டிக்கொடுத்த" அந்தத் துரோகிகள், "அன்னியருக்கு உடந்தையாயிருந்த" அந்தமதத் துரோகிகள், "தங்கள் சாதியபிமானத்தை மறந்த" அந்தத் துரோகிகள் யார்? "அன்னியருக்கு நாட்டைக் காட்டிக்கொடுத்துச் சதிசெய்தோன் யார்? என்று யான் வினவியதற்குக் "கடம்பூர்க்கு வழியாதோவெனின் இடம்பூணி என்னுஷின் கீன்றன்று" என்று விடையிறுத்தவன் சிலமாய், "அந்தச் சதிகாரரைத்தான் திருத்தவேண்டும். அவர்களைத்தான் இழித்துக்கூறவேண்டும். இப்போது விளங்குகிறதா? எனத் "தமிழரசு" முழங்குகிறார். ஆனால், அந்தச் சதிகாரர் இன்னாரென அறியாமல் அவர்களைத் திருத்துவது எங்ஙனம்? இழித்துக் கூறுவது எவ்விதம்?

காக்கைவன்னியன் செய்த துரோகம் என்ன? பரநிருபசிங்கன் செய்த துரோகம் என்ன? இவர்களுக்கு அழிக்கப்பட்ட பட்டம் என்ன? பதவி என்ன? பணம் எவ்வளவு? என்று யான் கேட்கவில்லை. பதவிக்காக, பட்டத்துக்காக, பணஞ்சம்பாதிப்பதற்காக மதம்விட்டு மதம்மாறியவர்களும், அங்ஙனம் மாறித் தேசத்தைக் காட்டிக்கொடுத்தோருமான இந்தச் சதிகாரர் யார்? கிறீஸ்தவர்களா? அவ்வாறாயின் அவர்கள் மதம்விட்டு மதம்மாறி அதாவது சைவர்களாகித் தேசத்தைக் காட்டிக்கொடுத்தார்களா? அல்லது சைவர்கள்தான் மதம்விட்டு மதம்மாறித் தேசத்தைக்காட்டிக்கொடுத்தார்களா? தமிழரசே! தயங்காது சாற்றும்! கோழைகளாகப் பதுங்காது இனியாவது சாற்றும்!!

"சங்கிலியன் மன்னரில் 1544-ம் வருடம் மார்கழிமாதத்தில் 600 பேரை மதம்மாறியதற்காகக் கொலைசெய்வித்தான்" என்ற சரித்திர சம்பவத்தை ஆண்டுமாதத்துடன் "தமிழரசு" வலிய எடுத்துக்கூறுகின்றார். இந்தப் பெரும் இரத்தப்பழியைத் தேடிக்கொண்ட சங்கிலியன் யார்? ஓர் தமிழரசன். அத்துடன் ஓர் சை...தமிழரசன். அந்த அறுநூறுபேரையும் அவன் என் கொலைசெய்வித்தான்? தேசத்தைக் காட்டிக்கொடுத்த துரோகத்திற்காகவா? இல்லை, "தமிழரசு" எடுத்துக்காட்டியபடி மதம்மாறியதற்காகவே! அதனால் இவர்கள் சதிகாரர் அல்லர் அன்றோ!

ஈற்றில், "நாம் ஏதோ அரசியல் ரீதியில் இன்று சைவஆலயங்களைக் கிறீஸ்தவர்கள் தம்பிரசாரத்திற்காக உபயோகிக்கிறார்களே யென்று எழுதப்போக" எனவரைந்து கடைசியாக விஷயத்தை விளங்க வைத்துத் 'தமிழரசு' தனது உண்மைக்கோலத்தை ஒளியாமல்கொள்ளாமல் துலாம்பரமாக உலகுக்கு வெளிக்காட்டிவிட்ட "நுண்ணறிவு" பாராட்டத்தக்கதே. அம்மம்ம! இன்று சைவ ஆலயங்களைக் கிறீஸ்தவர்கள் தம்பிரசாரத்திற்காக உபயோகிக்கிறார்களா? அங்ஙனம் உபயோகிக்கவிட்டுச் சைவமக்களெல்லாம் கண்மூடித்தனமாய் வாளாவிருக்கின்றார்களா? சைவ ஆலயங்களெல்லாம் இன்று கிறீஸ்தவர்களின் அரசியற்பிரசார மேடைகளாகிவிட்டனதானா? இது உண்மைச் சங்கதிதானா? இதனை வெளியிடப்பயந்து கோழைகளாகப் பதுங்குவதும் வீரத்துவ செயலாகுமா? என்னே! "அந்நிய இரத்தக்கறைபடிந்த துரோகமதத்தைத் தழுவிய" என்றும், "ஆராய்ச்சிக்கு எட்டாத ஆதியையுடைய அரும்பெரும் மதமான சைவத்தை அடகுவைத்த" என்றும் வரைந்து சைவமக்களிடையே கிளர்ச்சியை உண்டுபண்ணி, அவர்களையும், கிறீஸ்தவர்களையும் அண்டப்பிடித்துவிடமுனைந்த 'தமிழர'சின் தந்திர சூழ்ச்சியும், "நுண்ணறி"வும் இப்போதுதான் எனக்கும் நன்றாய்விளங்குகின்றது. "விஷயத்தை விளங்கிக்கொள்ளும் ஆற்ற"லும் இப்போதுதான் பிறந்திருக்கிறது. நிற்க, தமிழரசே! கிறீஸ்தவர்கள் தம்பிரசாரத்திற்காக உபயோகித்துள்ள ஒரு சைவக்கோயிலை எடுத்துச்சொல்லும்! கோழைகளாகப் பதுங்குவது தாமல்ல என்று சொல்லுகின்றீரே! நல்லது ஒருகோயிலை எடுத்துச்சொல்லும்! அப்போது விவாதத்திலிறங்கவிரும்பாத உமது நல்லெண்ணத்தையும், நுண்ணறிவையும் உலகம் கண்டுகொள்ளும்! கிறீஸ்தவர்கள் தம் பிரசாரத்திற்காகச் சைவாலயங்களை உபயோகிக்கிறார்கள் என்று நீர் ஊறிய, உலகமறிய எழுதியிருப்பதே அக்கோயில்களை இழிவுபடுத்துகின்ற ஓர் துரோகமாகும்? அக்காலத்திலே அவர்கள் சைவக்கோயில்களை இடித்தார்களெனில், அதிலும் பாரப்பட்ட ஓர்துரோகம் இதுவாகும். "நுணலும் தன்வாயாற்கெடும்." இனிச்சொல்லும் சாதிகாரர் யாரென்று?

## வெள்ளிக் குருசுச் செபமாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துரைசாணியும் வெளிகொள்ளவே, அவர்கள்வரவை எதிர்பார்த்திருந்த அவ்விளநங்கை முகமலர்ச்சியுடன் இருவரையும் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள். அங்கே அவர்கள்கால் மணிநேரம்வரையில் சம்பாஷித்ததன்மேல் மூவருமாக வெளிகொண்டு அங்குநின்ற மோட்டர் ரதத்தில் ஏறினார்கள். ஏறியதும் ரதம்புறப்பட்டுப் பதமையாகச்சென்று நகரின்சுற்றாடலிலுள்ள அலங்காரமான ஓர்பெரிய மனைமுன்பாகப் போய்நிற்க, மூவரும் அதைவிட்டிறங்கினார்கள்.

அப்போது அம்மனையின்முன் காத்துநின்ற ஓர் பாட்டி புன்முறுவலுடன் அவ்வாலிபரை நோக்கி: "தம்பி! இந்தப்பெண்மணிதானா நீசொன்ன அந்த நேர்ஸ்பிலோமினா" என்று மிகுந்தபட்சத்துடன் வினவினாள். வாலிபரும் "ஆம் பாட்டி, இவதான்" என்று விடையிறுத்தார். உடனேபாட்டி உள்ளன்புபெருகத் தனது இருகரங்களாலும் அவளைவாரியணைத்துப் பெரிதும் அங்கலாய்ப்புடன் அவள் கன்னத்தில் ஓர்முத்தம்கொடுத்து: "வா பிள்ளைவா" என்று கையிற்பிடித்து மெல்லமெல்ல நடந்து உள்ளே அழைத்துச்சென்று ஓர் ஆசனத்தில் அமரச்செய்தனள்.

அதன்மேல் பாட்டி, தனது பேரப்பிள்ளை ஆஸ்பத்திரியில் காயங்கட்டப்பட்டுக் கிடந்தது முதல் நிகழ்ந்தசம்பவமுழுவதையும் ஆதியோடந்தமாய் அவள் வாயிலாகவே கேட்டறிந்துகொண்டாள். அப்போது அம்மாளிகையின் சோபிதகாட்சியும், அங்குகண்டவைகளின் பெருமிதமாட்சியும் நேர்ஸ்பிலோமினாவுக்குப் பேராச்சரியத்தை உண்டுபண்ணின. அன்றுவிருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தாரெல்லாம் அவளின் வீரத்துவசெயலை ஒரேமுகமாகப்பாராட்டி அவளுக்குச் சோபனங்கூறி நின்றார்கள். கடைசியாக விருந்துஆரம்பமாயிற்று. அஃது ஓர்இராசவிருந்தாகவே காணப்பட்டது. அவ்வேளை எல்லோரும் நேர்ஸ் பிலோமினாவுக்குப் புகழ்மாலை சூட்டியபடியே சந்துஷ்டியாக விருந்தருந்தினார்கள்.

நடுவிருந்தின்போது பீற்றர் சிறுகப்புன்னகையுடன் தன் தாயைவிழித்து: "அம்மா! நேர்ஸ்பிலோமினா எனக்குச் செய்யாமற்செய்த பேருபகாரத்துக்குத் தாங்கள்யாது கைம்மாறு செய்யப்போகிறீர்களோ?" என்று கனிவானகுரலில் மொழிந்தான். அதைக்கேட்ட அவன் தாயான சீமாட்டி: "மகனே! யாதுகைம்மாறு செய்யப்போகிறீர்களோ என்று கேட்கின்றாயா? ஆம், நான் சிறந்த ஓர்கைம்மாறுதான் செய்யவிருக்கிறேன். இந்தப்பெரியமனையையும், எனக்குச்சொந்தமான சகலசொத்துக்களையுமே நேர்ஸ்பிலோமினாவுக்கு நிச்சயமாகக் கையளிக்கப்போகின்றேன்."

இதைக்கேட்டதே பந்தியமர்ந்து இருந்தாரெல்லாம் பெரிதும் பிரமித்தவர்களாய்ச் சீமாட்டியின்வதனத்தை நோக்கினர். சிறிதுவேளை யாதாமோர் பேச்சுமின்றியே மவுனமாய் இருந்தனர். பீற்றரும் மிகுந்ததிகைப்படைந்தவனாய்ச் சிறிதுவேளை எதனையோ சிந்தித்துவிட்டுத் தாயைநோக்கி: "அப்போது அம்மா! அன்னை......." என்று மெதுவாகக் கூறினன்.

சீமாட்டி இதைக்கேட்டதே சிரித்துக்கொண்டு: "ஆம், மகனே! உன்னையுந்தான் நேர்ஸ்பிலோமினாவிடம் கையளிக்கப்போகிறேன். இத்தனைவருடகாலமும் ஒரு ஊதாரியாய்த்திரிந்து பெருமைவாய்ந்த எங்கள்குடும்பத்திற்கே பெரியஅவமரியாதையை உண்டுபண்ணினாய். அதனால் எங்கள்உள்ளம்மாத்திரம் அல்ல, இந்த அழகியஇல்லமும் கவலை என்னும்காரிருள் சூழ்ந்ததாய்க் காட்சியளித்தது. எங்கள்குடும்பவிளக்கு அணைந்துபோகாமல் நாங்கள் அருமையாகப் பெற்றெடுத்த ஒரேயொருபுதல்வனாகியநீ துட்டர்சகவாசஞ்செய்து கெட்டழிந்துபோவதைக்கண்டு நானும், உன் தந்தையும் கவலையில்ஆழ்ந்து, கையெடாதகோவிலெல்லாம் கையெடுத்து, கண்ணீரையே தண்ணீராகப் பருகிவந்தோம். கடைசியாக உன்தந்தை கவலைமேலிட்டவராய்த் தீராப்பிணிகண்டு பாயும்படுக்கையுமாக வீழ்ந்து அந்தோ! மரணத்திரையில் மறைந்துவிட்டார். இந்தநிலைமையிலே உன்னை மனந்திருப்பி நல்வழிப்படுத்தி எனதுஉள்ளத்தைக் களிக்கச்செய்த நேர்ஸ்பிலோமினாதான் உனதுவாழ்க்கைத் துணைவியாகி இந்த எங்கள் இல்லத்தையும், நீ ஓர்குலவிளக்காய் இருக்கவேண்டிய பெருமைவாய்ந்த எங்கள் குடும்பத்தையும் சிறக்கச்செய்யவேண்டியவள். ஆதலால் மகனே! அந்தமாதுநல்லாளுக்கு உன்னைக் கையளிக்க மனங்கொண்டேன். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக" என்று அழுத்தமாகக்கூறினாள். இதைக் கேட்டதே பீற்றரும், பிலோமினாவும் நாணத்தினால் தலைகுனிந்தார்கள். பந்தியமர்ந்திருந்த சீமான்கள், சீமாட்டிகள் எல்லாரும் அதுசரிதான்என்று சம்மதித்தவர்கள்போல் தலையை மெதுவாக அசைத்தார்கள். மூன்று மாசங்களின்பின், முன்னர்அம்மூவரும் சந்திக்கநேர்ந்த சந்தானுள்கோவிலிலே இருவருக்கும் மங்கலகரமாகத் திருமணம் நிறைவேறியது. சுபம்!

## 46 வருடச்சிறைத் தண்டனை

எல்லாமாக 46 வருடசிறைத் தண்டனைபெற்று மறியலில் இருந்துவருகின்ற டி. ஜே. ஐய்சுந்தர என்பவன் சென்ற புதன்கிழமை அப்பீல்கோட்டில் நேர்முகமாகச் சமுகங்கொடுத்து, முன்னர் தனது அப்பீல்வழக்குகளெல்லாம் தள்ளுபட்டமையாலே அன்றைய அப்பீல்வழக்கிலும் ஆட்சேபனை செய்வது பயனற்றதாகுமென்றும், தான் சீவபரியந்தம் சிறையில் இருக்கவேண்டியவனேயென்றும் அப்பீலை விசாரணைசெய்யவிருந்த நீதியரசர்களிடம் தெரிவித்துக் கொண்டான். என்றாலும் அவர்கள் அவ்வழக்கிலே அவனுக்கு விதிக்கப்பட்டிருந்த நான்கு வருடசிறைத்தண்டனையை இரண்டு வருட சிறைத்தண்டனையாகக் குறைத்துவிடலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேற்றத்திட்டங்களும் — — குளங்களின் திருத்தமும்

## கமத்தொழிலைப் பெருக்க நடைபெறும் முயற்சிகள்.

### வடமாகாணம் செழிப்புற அரசாங்க உதவி ஏசென்றர் கமக்காரருக்கு விடுக்கும் வேண்டுகோள்

கமத்தொழிற்பகுதியின் பிரசாரக் கிளையினர் யாழ்ப்பாணப் பகுதியின் ஒன்பதுகாரியாதிகாரிகளின் வட்டாரங்கள்அனைத்திலும் இதற்குமுன சென்றறியாத தூரமான இடங்களிற்கூட— கமத்தொழில், கைத்தொழிற் பொருட்காட்சிகள் நடாத்தி வேகமான பிரசாரஞ் செய்ததன் விளைவாக, 1948-ம் ஆண்டிலே உணவுப்பொருள் அபிவிருத்தி இயக்கத்தில் எல்லாக்கமக்காரரிடத்தும் பெரியதோர் ஆர்வம் பொங்கியது. யாழ்ப்பாணக் கமக்காரருக்குச் சாதனமாகவுள்ள பெருங்குளம், இரணைமடுக் குளமொன்றே. இந்தக்குளத்தை அடுத்துள்ள வயல்களிற்கூட முன் எப்போதும் இல்லாத வகையில் பெருந்தொகையான நிலப்பகுதிகள் நெற்செய்கைக்கு வந்தன. 1948-ம் ஆண்டின் சிறுபோக, காலபோக காலங்களிலேதான் விளைவும் ஏறக்குறைய 11,00,000 புசல்களாக இருந்தது. இதனைக்கண்டு பெரியதோர்காரியத்தைச் சாதித்துவிட்டதாக மகிழ்ச்சியால் மடிந்திருக்க நியாயமில்லை. 1948-ம் ஆண்டிலே நெற்செய்கைக்கு 1,500 ஏக்கர்நிலம் புதிதாக—முன்னையிலும் அதிகப்படியாக—வந்தது. இதனை உணவுப்பொருள் அபிவிருத்தி இயக்கத்தின் ஆரம்பபடியென்றே நாம் கருதுதல்வேண்டும்.

1948-ம் ஆண்டில் நடந்த பிரசாரவேலைகளின் விளைவாக எனக்குப்பெரியதோர் ஊக்கம் பிறந்தது. கமப்போட்டிகள், பரிசுகள், பிரசாரவேலைகள் முதலியவற்றிற்கு முன்னிலும் பார்க்க அதிகமானபணத்தை அரசாங்கத்தினிடமிருந்து 1948—49-ம் ஆண்டுகளுக்குப் பெற்றுக்கொள்ளல் வேண்டுமென்னும் எண்ணமும் உண்டாயது. 1949-ம் ஆண்டு புரட்டாசி மாசம் முடியுமுன் பெருந்தொகையான கமப்பரிசுகள் காரியாதிகாரிகளின் வட்டாரங்கள் அனைத்திலும் வழங்கப்படும். யாழ்ப்பாண மண்வெட்டிகள், பிறதேசமண்வெட்டிகள், இன்னும் வேறுவகைப்பட்ட கமக்கருவிகள் பரிசுகளாக அளிக்கப்படும். யாழ்ப்பாணத்திலே விசேஷமாக மண்வெட்டிகள் இப்போது இறக்குமதி செய்யப்படுவதில்லை. ஆகையால், அவற்றைக் குறைந்த விலையிலும், பலவிதப்பட்ட நிலங்களில் உபயோகிக்கக்கூடிய முறையிலும் செய்துதருமாறு சமீபத்தில் என்னால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இந்தவேலையைத் திருத்தமாகச் செய்துதர ஒப்புக்கொண்ட இரும்பு வேலைத்தொழிலாளருக்கு யான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

### பிரசாரம்

எந்தவகையிலும் உணவுப்பொருட் பெருக்கத்தை வேகப்படுத்த வேண்டுமென்பதும், கமக்காரருக்குப் பொருளுதவியும், பிறஉதவியும் கொடுத்து அதிகப்படியான நிலத்தைச் செய்கைப்படுத்த வேண்டுமென்பதும் கமத்தொழில் மந்திரியாரின் பிரதான நோக்கமாக இருக்கின்றபடியால், அதிகப்படியான உணவுப்பொருட்களை உண்டாக்குவதில் தளராத ஊக்கமும், நீடித்தமுயற்சியும் கொள்ளத்தக்கதோர் மனப்பான்மையைக் கமக்காரரிடத்து உண்டாக்க வேண்டும். அதற்கு இடைவிடாத பிரசாரமேயன்றி வேறொந்த வழியுமில்லை.

இந்தநோக்கத்தை மனதில் வைத்துக்கொண்டே ஒன்பது காரியாதிகாரிகளும், யாழ்ப்பாண மணியகாரனும், உணவுப்பொருள் அபிவிருத்தித்துறையின் பொறுப்பிற்குரிய அதிகாரியாகிய யானும் இந்தஆண்டிலே கமத்தொழில், கைத்தொழில் முதலிய தொழிற்பொருட்காட்சி ஒன்றை மத்தியஇடத்தில் வைக்கவேண்டுமென்று தீர்மானித்தோம். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள்ளேயும், அடுத்த தீவுப் பகுதிகளுக்குள்ளேயும் எருவைச் சொரிந்து வெயர்வையைச் சிந்தித் தம்மாலியன்றளவு உணவுப்பொருட்களை உண்டாக்கிவிட்டதாக மகிழ்ச்சியோடுகைகட்டிக்கொண்டிருந்த யாழ்ப்பாணத்தவரை யுத்தகாலத்திலும், அதற்குப்பின்பும் ஏற்பட்ட உணவுப் பஞ்சம் நடுங்கச்செய்தது. அதிகப்படியான நிலத்தைச் செய்கைப்படுத்துதல், உணவுப்பொருட்களைப் பெருக்குதல் முதலியமுயற்சிகள் திறம்பட நடக்கவேண்டின் அவற்றிற்குரிய வேலைகளுக்குக் குடாநாட்டிற்குள்ளேயும், தீவுப் பகுதிகளுக்குள்ளேயும் இனி இடமில்லை. குடாநாட்டிற்குத் தெற்கே, நீர்வளம் நிலவளம் நிறைந்து பரந்துகிடக்கும் நிலப்பகுதியிலேயே அந்தவேலைகள் நடைபெறல்வேண்டும்.

யாழ்ப்பாணடிஸ்திறிக்கிலே4,80,000 மக்கள்வசிக்கின்றார்கள். சாதாரணமாக மழையின்மை, அதிக மழை முதலிய இடையூறுகள் இல்லாதிருந்தால் 10,00,000 புசல் நெல்விளைவு யாழ்ப்பாணத்திலுண்டு. ஆனால், யாழ்ப்பாண மக்கள் அனைவருக்கும் உணவு அளிப்பதாகஇருந்தால் இன்னும் 40,00,000 அதிகப்படியான புசல்நெல் விளைவு வேண்டும். இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு இன்னும் 1,50,000 ஏக்கர் நிலமாகுதல் செய்கைக்கு வருதல் வேண்டும். இந்தநிலைமையில் ஒரு

***********-**********

திரு. ஈ. ஜே. இராசரத்னம் C. C. S.

***********-**********

கேள்வி எழுவது இயல்பே. நிலம் எங்கே? நீர் எங்கே? யாழ்ப்பாணக்குடாநாட்டுக் கமச்செய்கை மிகவும்சுருக்கமானது. சிறுதுண்டு நிலங்களில் ஓயாது உரம்ஊட்டிப் பயன்பெறும் முறையிலேயே அது நடக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இப்போதுள்ள நிலைமையிலும்பார்க்கக் கமமுயற்சியைப் பெருக்குவதற்கு நிலம் இல்லை. வழியுமில்லை.

### வெளியில் குடியேற்றம்

ஆகையால் யாழ்ப்பாணத்தவர் நாட்டைவிட்டு வெளியேபோய்க் குடியேறவேண்டியது அவசியமாகின்றது. யாழ்ப்பாணமக்கள் உய்வதற்குவழி இதுவொன்றே. குடாநாட்டிற்குத் தெற்கே நீர் நிறையஉண்டு. நிலமும் நிறைந்த வளமுடையதாக இருக்கின்றது. யாழ்ப்பாணத்திலே செய்யும் முயற்சிக்குக் கிடைக்கும் பயனிலும் பார்க்கப் பன்மடங்குபயன் அங்கு கிடைக்கும். யுத்தத்திற்குப்பின் ஏற்பட்ட பொருளாதார, அரசியல்கிளர்ச்சிகளின் விளைவாக மலாயாவிலிருந்து 30,000 யாழ்ப்பாணத்தவர் எங்கள் சிறு குடாநாட்டைநோக்கி ஓடிவந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கும் கதியில்லை, இங்கும்கதியில்லை.

யாழ்ப்பாணக் கமக்காரருடைய ஆடு, மாடுகளை மெல்லமெல்ல இனம்மாற்றி உயர்த்தும்பொருட்டுத் திருநெல்வேலியில் இருப்பதுபோல் இன்னும் நாலு இடங்களில் கமத்தொழிற் பகுதியார், எருதுகள் [மாப்பிள்ளை மாடுகள்] வைத்திருக்கிறார்கள். இன்னும் மூன்று இடங்களில் இந்த ஒழுங்குசெய்யப்படும். பரந்தனுக்கு வடக்கே ஒரு மேய்ச்சல்நிலம் திறப்பதற்கு அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்திருக்கிறதென்றவிஷயம் யாழ்ப்பாணக் கமக்காரருக்கு ஒருமகிழ்ச்சியான செய்தியாகுமென்று நினைக்கின்றேன். யாழ்ப்பாணம்—கண்டி றோட்டிற்குக் கிழக்காகவும், பரந்தன்—முரசுமோட்டை றோட்டிற்கு வடக்காகவும் 500 ஏக்கர் கொண்ட விசாலமான ஒருகாட்டை மேய்ச்சல்நிலமாக்குவதற்குரிய வேலைகள் வெகுசீக்கிரத்தில் ஆரம்பிக்கப்படும்.

பரந்தனில் ஒருபட்டினம் அமைப்பதற்குரிய திட்டம்ஒன்று உருவாகிவருகின்றது. அதற்குரிய அளவு வேலைகள் முதலியனவெல்லாம் பூர்த்தியாகிவிட்டன. இரணைமடுக்குளத் திட்டத்தின்கீழ் வயல்களை உடையோர்க்கெல்லாம் வீடுகட்டிக் குடியிருத்தற்குரிய மேட்டுநிலம் 700 ஏக்கர்வரையிலே வெகுவிரைவில் கிடைக்குமென நினைக்கின்றேன். யாழ்ப்பாணம்—கண்டி றோட்டிற்குக் கிழக்காகவும், பரந்தன்—முரசுமோட்டை றோட்டிற்கு வடக்காகவும்உள்ளது இந்த நிலம். ஆகக்குறைந்தது 250—300 வயற்காரர்கள் அல்லது செய்கையாளர்கள் சேர்ந்து ஒருசிறு பட்டினத்தை அமைத்துக்கொள்ளலாமென நினைக்கின்றேன்.

### சிறுகுளங்கள் வாய்க்கால்கள்

1947-ம் ஆண்டிலும், 1948-ம் ஆண்டிலும் 21 வாய்க்கால்கள் திருத்தப்பெற்றன. 16 நீர்த்தடைகள் நிறுவப்பட்டன. அழிந்துபோன 16 கிராமக் குளங்கள் தோண்டப்பெற்றன. அழிந்தும், சிதைந்துங்கிடக்கும் வாய்க்கால்களையும், குளங்களையும் திருத்தியமைப்பதின் அவசியத்தைஉணர்ந்த கிராமவாசிகள் இந்தப் பகுதிகளிலேயுள்ள குளங்கள், வாய்க்கால்கள் எல்லாம் திருத்தப்படல் வேண்டுமென்று ஓயாது கிளர்ச்சிசெய்துகொண்டிருக்கின்றனர். இந்தவேலையைச் செய்துமுடிப்பதற்கு அரசாங்கம் இணக்கமாக இருக்கின்றது. பயிற்சிபெற்ற உத்தியோகஸ்தர்கள் போதாமையால் 1949-ம் ஆண்டு வைகாசிமாசம் வரைக்கும் இந்தவேலைகள் முன்னேற்றமடையாதிருந்தன. எனினும் இரண்டு வாய்க்கால்கள் நீரோட்ட முறைக்கேற்பத் தோண்டப்பட்டும், திருத்தியமைக்கப்பட்டுமிருக்கின்றன. ஒரு நீர்த்தடையும் கட்டப்பட்டிருக்கிறது. கீழ்க்காணப்படும்வேலைகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டு 1949-ம் ஆண்டு புரட்டாசி மாசம் முடியுமுன் முடிவடைய இருக்கின்றன.

4 சிறுகுளங்கள்.
3 கிராமக்குளங்கள்.
18 நீர்த்தடைகள்.
13 வாய்க்கால்கள்.
16 தாலவைகள்.

1949—50-ம் ஆண்டில் இன்னும் அதிகமான வேலைகள் நடைபெறும்.

### நிலங்களை விருத்திசெய்தலும் குடியேற்றமும்

நிலங்களை விருத்திசெய்வதற்கும், கமக்குடியேற்ற திட்டங்களுக்கும் அரசாங்கத்தால் இந்த டிஸ்திறிக்கிலே காலத்துக்குக்காலம் பெருந்தொகையானபணம் செலவிடப்பட்டிருக்கிறது. பிரதானமாக ஆனையிறவிற்குத் தெற்கே நீர்ப்பாய்ச்சல்வசதியுள்ள இடங்களிலேயே அதிகமானசெலவு நடந்திருக்கிறது. 1947-ம் ஆண்டு முடிவதற்குமுன் 800 ஏக்கர் காடு அரசாங்க செலவில் வெட்டித்திருத்தி நெற்செய்கைக்குக் கொண்டுவரப்பட்டது. 1948-ம் ஆண்டிலே இங்கு குடியேறப்போகும் மக்களுக்கு வீடுகட்டும்பொருட்டு 640 ஏக்கரும், மேய்ச்சல் நிலத்திற்கென 590 ஏக்கரும் காடு வெட்டித் திருத்தப்பட்டது. இரணைமடு—கிளிநொச்சிப் பழைய குடியேற்ற திட்டத்தின்கீழ் நிலம்பெற்ற 62 பேருக்கும் நிரந்தரமான வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. பரந்தன் புதுக் குடியேற்ற திட்டத்தின்கீழ் வெகுசீக்கிரத்தில் 190 பேருக்குக் குடியேற்ற வசதிகள் செய்துகொடுக்க எண்ணியிருக்கின்றோம். இந்தப் புதுத் திட்டத்திற்குரிய குடியானவர்களைத் தெரிவு செய்தற்பொருட்டு 1949-ம் ஆண்டு புரட்டாசிமாசம் 15-ந்திகதி ஒரு காணிக்கச்சேரி நடக்கும். இதுவரையில் இந்தப் புதுத்திட்டத்தின் சார்பாக அநேகம்வீடுகள்கட்டி முடிந்திருக்கின்றன. கட்டிடப்பொருட்கள் போதியளவு கிடைப்பின் 1949-ம் ஆண்டு புரட்டாசிமாசம் முடிவதற்குமுன் 190 வீடுகளும் கட்டிமுடிப்பதாகத் தீர்மானம். ஒவ்வொரு குடியானவனுக்கும் 3 ஏக்கர் மேட்டு நிலமும், அதில் ஒருவீடும் கொடுக்கப்படும். மேட்டுநிலத்தில் தென்னை, மா, பலா முதலிய நெடுநாட் பயிர்களும், மிளகாய், வெங்காயம், எள்ளு, உழுந்து முதலிய சிறுபயிர்களும், காய்கறித் தோட்டமும் செய்யலாம். இதனோடு 4 ஏக்கர் நெல்வயலும் ஒவ்வொருகுடியானவனுக்கும் கொடுக்கப்படும். குடியானவர்களை இந்த இடத்தில் நிரந்தரமாக இருக்கச்செய்யும் பொருட்டு அவர்களுக்கு முதற்செய்கைக்கு விதைநெல்லும், செய்கைக்கு வேண்டிய கருவிகளும் இலவசமாகக் கொடுக்கப்படும். ஒருசோடி ஊர்மாடுகளோ அல்லது எருமைக் கடாக்களோ கடனாகக் கொடுப்பதோடு முதலாவது அறுவடைக் காலம்வரையும் மாசம் 15 ரூபாவீதம் உதவிப் பணமும் வழங்கப்படும். குடியானவர்களின் சமுதாய வாழ்விற்கு இன்றியமையாத வண்ணார், அம்பட்டர், கொல்லர், தச்சர் முதலிய தொழிலாளிகளையும் இங்கே குடியேறுவதாகத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த இடத்திலேவந்து நிரந்தரமாக வாழவிரும்புபவரும், உணவுப்பொருட் செய்கையில் விருப்பமுள்ளவரும், கமத்தொழில் மனப்பான்மையுள்ளவரும், சொந்தமாய் நிலமில்லாதவர்களுமாகிய கிராமவாசிகளையே இந்தத்திட்டத்தில் குடியானவர்களாகத் தெரிந்தெடுக்கப்படும். ஒவ்வொரு குடியானவனும் தனக்குக் கிடைக்கும் 7 ஏக்கர் நிலத்திற்கும், வீட்டிற்குமாக அரசாங்கத்துக்கு ஆண்டிற்கொருமுறை கட்டவேண்டிய பணத்தின்தொகை 70 ரூபாவுக்கு மேலாகாது. ஆனால், முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒன்றும் கட்டவேண்டியதில்லை.

### சமுதாய வாழ்வு

குடியானவர்களின் சமுதாயவாழ்வு வசதிகளின்பொருட்டு 80 ஏக்கர்நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீண்ட றோட்டுகளும், விசாலமான சந்திகளும் போடப்பட்டிருக்கின்றன. வெகு சீக்கிரத்தில் நிழல்மரங்களும், மலர்மரங்களும் றோட்டுஓரங்களில் நடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு பாடசாலை, பிரசவவிடுதி, வைத்தியசாலை, ஆசிரியர்க்குவீடு, மருத்துவப்பெண்களுக்கு வீடு, அப்போதிக்கரிக்கு வீடு, சுகாதார உதவியாளருக்கு வீடு இவையெல்லாம் விரைவில் கட்டுவதற்குத் திட்டமிருக்கின்றது. குடியானவர்கள் கோயில்கள், ஐக்கிய பண்டகசாலைகள் முதலியன கட்டுவதற்கும் போதியநிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு சந்தையும் ஸ்தாபிக்கப்படும். இவற்றோடு நாலு விளையாட்டு மைதானங்களும், ஒரு மரச்சோலையும் அமைப்பதாகவும்திட்டமிருக்கின்றது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்ப்பாய்ச்சற் குளங்கள்

ஆனையிறவுக்குத்தெற்கே இந்த டிஸ்திறிக்கைச் சேர்ந்தபகுதியிலே எத்தனையோ குளங்கள் இருக்கின்றன. சில ஆண்டுகளுக்குள்ளே அவற்றையெல்லாம் திருத்தி அடுத்துள்ளநிலங்களை வளப்படுத்திச் செய்கைக்குக் கொண்டுவரலாம. இதுவிஷயமாகக் கமத்தொழில் மந்திரியாருக்கு எத்தனையோ திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து இப்பகுதியில் உள்ளநிலங்களை விருத்திசெய்வதற்குரிய ஒருமுடிவான திட்டத்தை அரசாங்கம் தெளிவுபடுத்துமென நம்புகின்றோம். இது விஷயமாக என்சொந்த அபிப்பிராயங்களில் சிலவற்றை வெளியிட விரும்புகின்றேன் :

(1) யாழ்ப்பாண டிஸ்திறிக்கிலே அளவுக்கு மிஞ்சிய சனத்தொகை இருக்கின்றது. செய்கைக்குப் போதியளவு நிலமின்றி எத்தனையோ கமக்காரர் தவிக்கின்றனர். நிரம்பியகல்வியறிவுபெற்ற எத்தனையோ வாலிபர்கள் தொழிலின்றித் தளர்கின்றனர். இவர்களெல்லாம் குடாநாட்டிலிருந்தும், தீவுபகுதிகளிலிருந்தும் உடனே வெளியேறி ஆனையிறவுக்குத் தெற்கே குடியேற வேண்டும். ஆனையிறவுக்குத் தெற்கே பரந்துகிடக்கும நிலப்பரப்பினுள் நிரந்தரமான குடியானவர்களின் தொகை ஏறக்குறைய 7,000 என்று கணிக்கப்படுகின்றது. குடியேற்றத்திற்கும், நிலச்செய்கைக்கும் வேண்டிய அளவுநிலம் இந்தப்பகுதியிலிருக்கின்ற காரணத்தால் நிலமின்றித் தவிக்கும் ஏழைக்கிராமியர்கள் மட்டுமின்றிப் பொருள் வசதியுள்ள நடுத்தரவகுப்பினர்கூட அந்த இடங்களிற்சென்று குடியேறுவதில் சிரத்தை கொள்ளல் வேண்டுமென்று நினைக்கிறேன்.

(2) அக்கராயன்குளத்தைத்திருத்தி அமைத்தல் வேண்டும். இப்போது இரணைமடுக் குளத்திலிருந்து நீர் பெறும் பரந்தன்நிலப்பரப்பு முழுவதற்கும் (6,000 ஏக்கர்) அக்கராயன் குளத்திலிருந்து நீர் கொடுக்க முடியும். இரணைமடுக் குளத்திலிருந்து இப்போது பரந்தனுக்குப்போகும் தண்ணீரை அரசாங்கத்திட்டத்திற்குப் புறம்பாய் முரசுமோட்டையில் சொந்தக்காரரால் நடத்தப்படும் 2,000 ஏக்கர்கமத்துக்கும், இன்னும் நெற்செய்கைக்குக் கொண்டுவரக் கூடியதாகவிருக்கும் அரசாங்க நிலத்திற்கும் 3,000 ஏக்கர் பயன்படுத்தலாம்.

(3) இரணைமடுக் குளத்தின் கட்டுகளைஉயர்த்தினால் நீர்த்தேக்கம் அதிகப்படும். அந்த அதிகப்படியான தண்ணீரைக்கொண்டு கனகராயன் ஆற்றிற்கு வலதுபக்கத்திலுள்ள 6,000 ஏக்கர் நிலத்தை அதாவது வட்டக்கச்சுக் கிராமத்திலுள்ள செய்கையற்றுக்கிடக்கும் நெல்வயல்களையும், கண்டாவளை, வெளிக்கண்டல் கிராமங்களிலுள்ள வளப்பமான நிலத்தையும் பயன்படுத்திப் பயிர்செய்யலாம். நீர்ப்பாய்ச்சல்பகுதி அதிபர் இரணைமடுக் குளத்தைப்பற்றிச்செய்த முதற்திட்டத்தின்படி, கரைச்சிப்பகுதியில் 20,000 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் கொடுப்பதாக இருந்தது. அதாவது கனகராயன்ஆற்றிற்கு இடதுபக்கத்தில் பரந்தன் 9,000 ஏக்கரும் முரசுமோட்டை 6,000 ஏக்கரும், கனகராயன் ஆற்றிற்கு வலதுபக்கத்தில் வட்டக்கச்சு 5,000ஏக்கரும். (Sessional) வெளியீடு 5,1926-இல் பார்க்க—அக்கராயன் குளத்தைத் திருத்தியமைப்பதாலும், இரணைமடுக் குளக்கட்டை உயர்த்துவதாலும் 11,000 ஏக்கர் அதிகப்படியானநிலம் செய்கைக்கு வரக்கூடும். இவற்றுள் 5,000 ஏக்கர் நீர்ப்பாய்ச்சலின்றிக் காலபோகத்தில் மட்டும் இப்பொழுதும் செய்கைபண்ணப்பட்டுவருகிறது.

(4) யாழ்ப்பாணப்பகுதிக்கும், மன்னார்ப்பகுதிக்கும்உள்ள எல்லைக்குச் சமீபத்திலிருப்பதும், துணுக்காய்ப் பகுதிக்குத் தெற்கேயிருப்பதுமாகிய வவனிக் குளத்தைத் திருத்தியமைத்தால் 2,000 ஆண்டுகட்கு முன்னேயும், பின்பு சிலஆண்டுகளாகவும் நெற்செய்கை வளமுறச்செய்யப்பட்டு இப்போது காடாய்க்கிடக்கும் 10,000 ஏக்கருக்கு மேலான பெரியதோர் நிலப்பரப்பைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இந்தக் குளத்தின்கட்டு நாலைந்து இடங்களில் சிதைந்துகிடக்கின்றது. ஆனால், மூன்றுமைல் நீளமானகட்டு இன்றும் அழியாமல் இருக்கின்றது. இந்தக் குளத்தை யடுத்துள்ள நிலப்பகுதி யாழ்ப்பாணம், மன்னார்ப்பகுதிகளில் மிகச்சிறந்த நிலங்களென்று பாராட்டப்படும் நிலங்களோடுவைத்து எண்ணக்கூடிய வளப்பம் வாய்ந்ததாக இருக்கிறது. இந்த நிலப்பகுதியை விருத்திபண்ணினால் விளையும் நன்மைக்கு எல்லையில்லை. இந்தப்பகுதி முழுவதற்குஞ்சேர்த்து ஒரு குடியேற்றத்திட்டம் வகுப்பதாக இருந்தால் அதற்குரிய பெருந்தொகைப்பணத்தை அரசாங்கத்தினிடத்தில் இப்போது எதிர்பார்க்க முடியாது. ஆனால், யாழ்ப்பாணத்திலுள்ள நடுத்தர வகுப்பார் தங்கள் சொந்தச் செலவிலும், வட்டிக் குறைவான அரசாங்க கடனுதவி கொண்டும் நிலங்களை இவ்விடத்தில் வாங்கி விருத்திசெய்வார்களானால் மிகப்பெரிய நன்மைகளைப் பெறமுடியும்.

(5) **கல்மடுக்குளம்:** இந்தக்குளத்தைத் திருத்தியமைத்தால் [illegible],000 ஏக்கருக்குமேலாக நீர்பாய்ச்ச முடியுமென்று சொல்லப்படுகிறது. இக்குளத்தையடுத்துள்ளநிலப்பகுதிவளப்பமுடையதாக இருக்கின்ற காரணத்தால் நடுத்தர வகுப்பார் வாங்கிப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

(6) பூநகரிப்பகுதியிலுள்ள வன்னேரிக்குளத்தை வெகு சீக்கிரத்தில் திருத்துவதற்கும், ஒருகுடியேற்றத்திட்டம் அமைப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

(7) ஆனையிறவுப் பாலந்தொடங்கிச் சுண்டிக்குளம் மணல் வேடுவரைக்கும் போகின்ற உப்புநீர் ஏரியை நல்ல நீர்க் குளமாக்கவேண்டியது அவசியம். இந்த ஏரியையும் மருதங்கேணி அல்லது ஆளியவளைக்குச் சமீபத்திலுள்ள வடமராட்சிகிழக்கு. ஏரியோடு ஒன்று சேர்ப்பதற்கு இரண்டு மைல் தூரமான ஒரு வாய்க்காலும் வெட்டப்படவேண்டும். இவ்வாறு செய்யின் ஒன்றிற்கும் பயன்படாது பரந்துகிடக்கும் மணற்தரை முழுவதும் தென்னந்தோட்டமாகவும், முந்திரித் தோட்டமாகவும், செழிப்புறச்செய்யலாம். இந்தத் திட்டத்தினால் இன்னும் எத்தனையோ நன்மைகள் விளையும்.

### ஓர் வேண்டுகோள்

இந்தப்பகுதியிலுள்ள ஒவ்வொரு கமத்தொழில் ஸ்தானத்திலுமிருந்து கமக் குடியேற்றத்திட்டம், உணவுப்பொருள் அபிவிருத்தி முதலியனபற்றிக் கமக்காரருக்குப் பேசுமாறு எனக்கு அழைப்புகள்—மறுக்கமுடியாத கட்டளைகளென்றே சொல்லவேண்டும்—வந்துகொண்டேயிருக்கின்றன. நமது நாட்டுமக்கள்—பிரதானமாக உணவுப்பொருள் விருத்தியில் ஈடுபட்டிருக்கும் பாமரமக்கள் இந்த விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கத்தொடங்கியிருக்கிறார்களென்பதற்கு இது சான்றாக இருக்கின்றது. வேலைமிகுதியாலும், உத்தியோக நெருக்கடியாலும் வந்தஅழைப்புகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள இயலாமலிருந்தமைபற்றி மிகவும் கவல்கின்றேன். எனது கந்தோர் மேசையிலிருந்து இதுவிஷயமாகயான்எழுதியகடிதங்கள் பலவற்றிலும் பார்க்க, கமக்காரர் மத்தியில் யான்சென்று அவர்களோடு அளவளாவி, விஷயங்களை எடுத்து விளக்கியதன் பயனாக ஏற்பட்டநன்மை மிகப்பெரிது என்று கருதுகின்றேன் கமக்குடியேற்றம், நிலத்தை விருத்திசெய்தல், உணவுப்பொருட் பெருக்கம் முதலிய துறைகளில் இதுவரையில் நடந்தனபற்றியும், இனிமேல் செய்யவேண்டியனபற்றியும் மிகமிகச் சுருக்கமாகவே இக்கட்டுரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும், இனிவரும் காலத்திலும் எங்களைத் துன்புறுத்திநிற்கும் உணவுப்பஞ்ச நிலையைத்தீர்த்துவைப்பதற்குப் போதியசிரத்தை எடுத்துக்கொள்ளுங்களென்பதே எனது நாட்டுமக்களுக்கு யான் உத்தியோகத்தினின்றும் இளைப்பாறுவதற்குமுன் விடுக்கும் கடைசிவிண்ணப்பம். நான இளைப்பாறும்காலம் மிகவும்நெருங்கி வருகின்றது. நமது நாட்டுமக்களை இந்தவிஷயங்களைப்பற்றிச் சிந்திக்குமாறு எனதுமுயற்சிகள் செய்துவிட்டால், அவர்கள் மிகவிரைவில் இந்தத் திட்டங்களையெல்லாம் தக்கவழிகளில் திறம்படச் சாதித்துவிடுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

## கரையூர் மீன்வாடி

கரையூரின் தென்பாகமாக உள்ளது மீன்வாடி. இங்கு கிழமையிலே ஒரு நாளேனும்தவறாது படகுகளிலும், வள்ளங்களிலும் மீன் இறக்குமதியாகிக்கொண்டு வருகிறது. இந்த வாடியில் காலை 6-30 மணிமுதல் தொடர்ந்து பிற்பகல் 6-30 மணிவரையிலும், சில நாட்களில் அர்த்தசாமம்வரையில் தானும்வியாபாரம்நடந்துகொண்டிருக்கும். கரையூரில்வாழும் மீன்பிடி தொழிலாளரின் மீன்கள் மாத்திரமல்ல, ஏனைய தொழில்களிலிருந்து பிடிக்கப்படும் மீன்களும் இந்த வாடியில்வந்து இறக்குமதியாகின்றன. மாதகல், நாவாந்துறை, பாஷையூர் முதலாம் இடங்களிலிருந்தும் கரையூர் மீன்வாடிக்கு மீன்கள் கொண்டுவந்து விற்பனையாகின்றன.

கரையூர் மீன்துறைமுகம் இரண்டு வருடங்களின்முன் திருத்தியமைக்கப்பட்டது. தற்போது படகுகளும், வள்ளங்களும் இதன் நாலாபக்கங்களிலும் வந்துதங்கி மீன்களை விற்பனைசெய்யக் கூடிய வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, மீன்பிடி தொழிலாளர் பலரும் தங்கள்மீன்களை இந்தவாடியில் கொண்டுவந்து விற்று ஆதாயம் அடைகின்றனர். இந்தவாடி, பட்டினத்தின் மத்தியில் இருக்கின்றமையால் வியாபாரிகள் சுலபமாக மீன்களைவாங்கி உள்நாடுகளுக்குக் கொண்டுபோய் நேரகாலத்துடன் அவைகளை விற்பனைசெய்யக் கூடியதாய் இருக்கிறது. மீன்பிடி தொழிலாளரும் மீன்களைப் போதிய விலைக்குவிற்றுச் சீவனம்பண்ணுகின்றனர். அதிகமான வியாபாரம் நடக்கும் இந்தவாடியைச் சூழவரக் குப்பைத்தொட்டிகள் ஒன்றேனும் அமைக்கப்படவில்லை. வெட்டித் துண்டாக்கி விற்கப்படும்பலவகை மீன்களின் குடர்கள், பழுதான மீன்கள், மற்றும் அழுகிய பொருட்களைத் தெருக்களிலும், நடைப்பாதைகளிலும் போடவேண்டிய சந்தர்ப்பம் மீன்பிடி தொழிலாளருக்கு ஏற்படுகின்றது.

மீன்வாடிக்கு அருகாமையில் கருவாட்டுத்தொழில் நடைபெறுகின்றது. கருவாட்டு வியாபாரம் அநேகமாகப் பெண்களின்ஆதீனத்தில் இருந்துவருகின்றது. இவர்கள் ஒருநாளைக்கு மூவாயிரத்துக்குமேற்பட்ட மீன்களைக் கீறிக் காயப்போடுகின்றனர். செளுத்துக் காலங்களில் ஒருவியாபாரி ஏறக்குறைய ஆயிரம்மீன்களுக்குக் குறையாமல் உலரவைக்கவேண்டிவரும். இவர்கள் கீறியமீன்களின் குடர்கள் நடைபாதையிலும், ஆங்காங்குள்ள வாய்க்கால்களிலும் வீசப்பட்டுக்கிடக்கின்றன. சிலமணித்தியாலங்கள் கழிந்ததின்பின் புலால்மணம் வீசத்தொடங்குகின்றது. மனிதனின் சீவனத்திற்கென்று செய்யும்தொழில் இறுதியில் அவனுடைய ஆரோக்கியத்துக்கே தீங்குவிளைக்கின்றது. மேலும் கருவாட்டுக் கொட்டில்களுக்குப் பின்புறமாக மலையாளப்புகையிலைக் கூட்டுறவுச்சங்க தொழிற்சாலை இருக்கின்றது. தொழிலாளர்கள் பெருந்தொகையாக வேலைசெய்யும் இடமாதலால் அதனைச் சூழவுள்ள இடங்களும் சுத்தமாக இருக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தவேண்டியிருக்கின்றது. தொழிலாளர்அருவருத்து வேலைசெய்யவேண்டிய நிலைமை முற்றாகநீக்கப்படவேண்டும்.

கொழும்பிலே சனங்கள் கடற்காற்றுச் சுவாசிக்கவென்று பெருந்திரளாகக் "கோல்பேஸ்" மைதானத்திற்குப் போவார்கள். யாழ்ப்பாணத்திலே பட்டினவாசிகளும், பிறரும் கடற்காற்றுச் சுவாசிக்கக் கரையூருக்கு அருகாமையிலுள்ள கடலணை நிலத்தில் உலாத்த வேண்டியிருக்கிறது. இங்ஙனம் உலாத்துகிறவர்கள் ஒருபக்கமிருந்து மறுபக்கத்திற்கு மீன்வாடியைக்கடந்து செல்ல வேண்டியவர்கள். ஆகவே, மீன்வாடி துப்பரவாக இருக்கவேண்டியது அவசியம். நாலாபக்கங்களிலும் வியாபாரப் புழக்கம்நிறைந்த இந்தவாடியைச் சுகாதாரமுறைப்படி வைக்க வேண்டிய அவசியத்தை மேலேகாட்டிய காரணங்களைக்கொண்டு இலேசாக அறிந்துகொள்ளலாம். கரையூர் மீன்வாடியைப்பார்க்கத் தருணம் கிடைத்தவர்களில் வாடிஇருக்கும் நிலைமையை நோக்கி மனம்கோணாதவர்கள் எவரும் இல்லை எனலாம். இலங்கையானது சுகாதார முன்னேற்றம் அடைந்துவரும் இக்காலத்திலே அதிகாரிகளும், சமூகத்தொண்டு செய்ய முன்வரும் பிரமுகர்களும் இவ்விஷயத்தில் பராமுகமாய் இருக்கவேண்டிய காரணம் எதுவுமில்லை.

யாழ்ப்பாண நகர சங்கத்திலே பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒவ்வொரு அங்கத்தவரும் இதுவிஷயமாய் இருந்துவரும் குறைகளை நிவிர்த்திசெய்யத் தீவிரமுயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். வாடியைச் சூழவரக் குப்பைத் தொட்டிகள் அமைக்கப்படல்வேண்டும். குப்பைத்தொட்டிகளை நாடோறும் துப்புரவாக்குவதற்காகக் கூலியாட்கள் நியமனம் செய்யப்படவேண்டும். இது பொதுவிஷயம்என்பதைமறக்கலாகாது. சுகாதாரம் சமுதாயமுன்னேற்றத்திற்கு அறிகுறியாகும். ஆகவே, அங்கத்தவர்கள் இதுவிஷயத்தை அடுத்துவரும் மாதாந்தக் கூட்டத்தில் எடுத்தாள முன்வருவார்களாக! அன்றேல் எமது வட்டார அங்கத்தவர் இதுவிஷயத்தில் தலையிட்டு ஆவன செய்துவைப்பாராக!

ஓர்அபிமானி

—இற்றைக்கு ஓர் வருடத்தின்முன் இருந்ததிலும் சர்வதேசநிலைமை தற்போது எவ்வளவோ அதிகம் நன்றாய் இருப்பதாலும், காரணகாரியமாக யாவற்றையும் சீர்தூக்கி ஆராய்ந்த பின்னரே தாம் இந்தமுடிவுக்குவந்ததாகவும் ஐக்கியநாடுகளின்ஸ்தாபன பிரதமகாரியதரிசியான டக்றர் லியே தெரிவித்திருக்கின்றார்.

—இங்கிலாந்திலுள்ள ஸ்ரொக்போட் என்ற இடத்திலுள்ள கோவிலிலிருக்கும் தேவதாயாரது சுரூபத்தின் தலையில் பல மாதங்கட்குமுன் சூட்டப்பட்ட இருறோசாமலர் முடிகளிலுள்ள மலர்கள் இன்னும் வாடாமல் இன்று மலர்ந்த மலர்கள்போன்றே இருக்கின்றன. முதல் றோசாமுடி 1947-ம்ஆண்டு வைகாசிமாதமும், இரண்டாவது றோசாமுடி 1948-ம்ஆண்டு வைகாசி மாதமும் சூட்டப்பட்டன.

—பிரித்தானிய பாராளுமன்றப் பொதுத்தேர்தல் அடுத்தவருடம் நிகழவிருக்கிறது. அத்தேர்தலிலே பிரித்தானிய அரசின் யுத்தகால பிரதமராய் விளங்கியிருந்த திரு. வின்ஸ்றன் சேர்ச்சில் அவர்களின் தொகுதிக்கு அங்குள்ள பொதுவுடைமைக் கட்சியும் போட்டியிலே ஓர்அபேட்சகரை நிறுத்தவிருக்கின்றது. ஏலவே தொழிற்கட்சி அவருடையதொகுதிக்குத் தனது அபேட்சகர் ஒருவரையும் தெரிவுசெய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சேன் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



### நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

சிங்கப்பூர்:—மருதமடுச்செபமாலைஅன்னையிடம் நான் கேட்டுக்கொண்டபடி எனது பிள்ளையின்நோய் சிறிதுசுகமுற்றிருப்பதால் இன்னும் முழுநோயும் சுகமுறும்படி மேலும் மேலும் அவவின் திருப்பாதாரவிந்தத்தை அண்டிநிற்கும்

M. S. J.

முருங்கன்:—திரா[illegible]முக்கிய கருமத்தை நிறைவேற்றித்தரும்படி கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியாரிடம் அடியாள் நேர்த்தி[illegible]செய்தேன். அவர் என் மன்றாட்டுக்கிரங்கிவருவதால் நேர்த்திப்படி அவர் புகழைப் பிரசித்தம்பண்ணுகிறேன். என் கருத்துகள் பூரணநிலை அடையுமென்பதே என்நம்பிக்கை. நன்றியாக ஏழைகளின் தருமஅப்பத்துக்கு ரூபா 2 அனுப்புகிறேன். அவர் நாமம்புகழப்படுவதாக.

ஆ. தீ.

மண்டைதீவு:—எனது பேரப்பிள்ளைக்கு உண்டான கடுமையானவருத்தம் திரு இருதயஆண்டவரிடமும், பரிசுத்த தேவ தாயார், அப்பிள்ளைகொண்ட பேருடையவராகிய அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். பேதுருவானவராதியோரிடமும கேட்டுக்கொண்டபடி [illegible]ற் சுகமானது. இதைப்பிரசுரிக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ச. இ. ஞானதிக்கன்

இறம்பைக்குளம்:—பரிசுத்தசெபமாலைத்தாயாருடைய மன்றாட்டினாலும், அர்ச். சூசையப்பர், கோடி அற்[illegible]தர், அர்ச். சவேரியார், அர்ச். செப[illegible]யார் இவர்களின் வேண்டுதலினாலும் என்மகனின் குழந்தை, திருஇருதயராசாவின் இரக்கமும் ஆசியும் அடையப்பெற்றதினால் ஏழைகளின் ஆறுதலுக்காக 2 ரூபா அனுப்புகிறேன்.

S. M. V.

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

யாழ்ப்பாணம்: மேரியோசேப்பின் 1-00—மஸ்கேலியா: எம். சில்வானுஸ் 1-00—கல்லில்லா: ஏ. எல். சைமன் 4-00—கரவெட்டி: பி. கபிரிகேற்பிள்ளை 2-00—மஸ்கேலியா: மேரிகபிரியேல் 1-00—பீற்றப்பிற்றற: ஏ. பிலிப்பையா 2-00—புத்தளம்: பி. எம். சந்திரசேகரா 1-00—பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 4-00—கல்கமுவா: அ. சந்தியாகுப்பிள்ளை 1-00—இளவாலை: அ. எலிசபேத் 5-00—கல்கமுவா: சீ. செபஸ்தியாம்பிள்ளை 1-00—அப்புத்தளை: எம். எஸ். பொன்னையா 2-00—யாழ்ப்பாணம்: பி. யோசேப்பு 1-00—நெடுந்தீவு: சு. யோசை எலிசபேத் 1-00, சீமான் ஆசீர்வாதம் -50—யாழ்ப்பாணம்: ஜே. பி. 5-00, பி. பி. யோசேப்பு -75—இளவாலை: ஏ. செபஸ்ரியாம்பிள்ளை 4-00—உடப்புசலாவை: எச். ஆர். சில்வானுஸ் 1-00—நனுஓயா: எவ். எம். பர்ணபாஸ் 2-00, ஜே. அருளானந்தம் 1-00—கல்லோயா: ஜே. எஸ். லவுறேன்சி 1-00—மாம்புரி: வ. சிமியாம்பிள்ளை 2-00—சுன்னாகம்: வ. யோசேப்பு 3-00—மாம்புரி: அ. வஸ்தியாம்பிள்ளை 1-00—அப்புத்தளை: எல். ஆபிரகாம் 2-00—அம்பிற்றியா: மிசெஸ். பி. ஏ. மாட்டீன் 2-00—கொழும்பு: க. அந்திரேசு 5-00—கம்பளை: மிசெஸ். ஏ. டி. சேவியர் 1-00—தலவாக்கொல்லை: வி. எம். லியோனிஸ் 1-00—அக்கரப்பற்றன: எல். ஏ. எஸ். தோமஸ் 2-00—பசறை: பிலிப் அன்ரனி 2-00—சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 20-00—மாருவில்: பிருங் அன்ரன் 10-50—பொகவந்தலாவ: பி. ஆர். மாட்டீன் 2-00—மன்னார்: அ. லூவீஸ்குரூஸ் 5-00—எழாலை: இ. ஞேசம்மா 3-00, ஐ. வரப்பிரகாசம் 1-00, பி. அம்பரோஸ் 2-00—லுணுகலை: பி. சுவக்கீம் 20-00, எம். அந்தோனியம்மாள் 1-00—யாழ்ப்பாணம்: பி. சி. பொன்னையா 10-00—உடப்புசலாவை: எஸ். வி. மரியறோஸ் பீற்றர் 1-00—கல்கமுவா: ம. சி. அந்தோனிப்பிள்ளை -50—ஏழாலை: ஜே. அன்னமேரி 1-00—மாதகல்: ஏ. பி. யூஸ்ரேஸ் 1-00—தியத்தலாவை: ஏ. எம். பீற்றர் 1-00—புத்தளம்: பி. அல்பிறெட் மரியநாயகம் 2-00—மஸ்கேலியா: எம். பஸ்ரியாம்பிள்ளை 4-00—மாத்தளை: ரி. எவ். சீமோன் 2-00—சுண்டிக்குளி: பி. எஸ். ஆர். 1-00—முருங்கன்: பி. ஜே. சிறில் 4-00—கல்கமுவா: அ. பஸ்ரியன் 1-00—கொழும்பு: பி. பிரான்சீஸ் செல்வநாயகம் 1-00—கொற்மல்லி: எவ். பி. சாமுவேல் 1-00—வவுனியா: எஸ். எம். வி. 2-00—காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 2-00—கொய்யாத்தோட்டம்: மேரி திரேசாபோல் 1-00—கண்டி: மிக்கேல் யோண் 1-00—மடுசீனு: கதிரவேல் 2-00, ஜே. எஸ். மாட்டீன் 2-00—வெருவலை: எஸ். எஸ். கொடிதோர் 4-50—அச்சுவேலி: க. சிங்கராயர் 1-00, பி. எஸ். 2-00—மண்டைதீவு: ச. இ. ஞானதிக்கம் 1-00—உடப்புசலாவை: எஸ். எம். யோசேப்பு 15-00—புத்தளம்: பிருங் எல். லியோ. 5-00—பண்டாரவளை: எஸ். பேர்னுட் பீற்றர் 2-50—நிவட்டா: வை. ஐ. கோமிஸ் 1-00—மலாயா: எஸ். யோசெவ் 13-00—அப்புத்தளை: எம். எஸ். பொன்னையா 2-00—கல்லில்லா: ஏ. எல். சைமன் 2-00—வேப்பங்குளம்: க. சின்னப்பு 1-00—குருநாகல்: ஜி. எஸ். சின்னத்துரை 1-00—தலவாக்கொல்லை: ஏ. எஸ். ஆசீர்வாதம் 1-00—சண்டிருப்பாய்: வ. கணபதிப்பிள்ளை 1-00.

| The Director, St. Joseph's Conference Bishop's House JAFFNA. | சென் வின்சென்ற் டி போல்சபைத்தலைவர் மேற்றிராசன மாளிகை யாழ்ப்பாணம். |
|---|---|

கத்தோலிக்க பெற்றோரே! இதோ கைகண்ட பலன்
இலாபத்தைக் கண்டும் இனித் தாமதம்வேண்டாம்

## கரையூர் விவாக இலாபநிதிச் சங்கம்

### 1949-ம் ஆண்டு சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களின் இலாப உபகரிப்பு.

| அங்கத்தவரின் பெயர் | இடம் | அங்கத்தனாய் இருந்த வருஷம் | கட்டிய தொகை ரூ. ச. | எடுத்த தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|
| அ. மாகிறேற் | யாழ்ப்பாணம் | 12 | 133-20 | 400-00 |
| தொம். செபஸ்தியாம்பிள்ளை | மாதகல் | 7 | 76-90 | 163-00 |
| லீனப்பு பாவிலுப்பிள்ளை | மாத்தளன் முல்லைத்தீவு | 6 | 63-40 | 133-00 |
| மரியம்மா தில்லையம்பலம் | வவுனியா | 8 | 86-00 | 180-00 |
| அந்தோனி மாகிறேற் குரூஸ் | தாள்வுபாடு, மன்னார் | 7 | 74-20 | 165-00 |
| மனுவல்பிள்ளை யோண்பிள்ளை | சுண்டிக்குளி | 8 | 86-80 | 183-00 |
| சூசை சுவானி | மக்குவில், இளவாலை | 6 | 67-00 | 135-00 |
| அந்தோனி எரோணி | கரையூர் | 7 | 76-80 | 165-00 |
| பிலிப்பையா எலிசபேத் | சுண்டிக்குளி | 8 | 83-20 | 183-00 |
| N. S. N. செல்லையா | மாதகல் | 7 | 71-50 | 160-00 |
| சீமான் யோசேப்வாஸ் | வங்காலை | 7 | 71-40 | 160-00 |
| சந்தியோ வஸ்தியாம்பிள்ளை | கரவெட்டி | 11 | 122-00 | 300-00 |
| வெனடிக்ற் தம்பிமுத்து | சுண்டிக்குளி | 7 | 72-50 | 163-00 |
| சுவக்கீன் அன்னம்மா | கரையூர் | 12 | 133-20 | 400-00 |
| வேலுப்பிள்ளை றிச்சாட் | முல்லைத்தீவு | 9 | 102-80 | 248-00 |
| த. அ. யோசவ் | மாதகல் | 8 | 85-00 | 185-00 |
| மி. திரேசம்மா | யாழ்ப்பாணம் | 12 | 130-00 | 392-34 |
| சூசைப்பிள்ளை மருசால்பிள்ளை | நானாட்டான் | 8 | 83-30 | 190-00 |
| லோறன்ஸ் அந்தோனிப்பிள். | மாரிசன்கூடல் | 11 | 121-50 | 304-00 |
| ம. பி. அன்ரெனி | யாழ்ப்பாணம் | 8 | 84-50 | 185-00 |
| பிறஞ்சி சூசைப்பிள்ளை | கரையூர் | 7 | 72-40 | 160-00 |
| வ. பி. அந்தோனிமுத்து | றசல்ஸ்குயர் ஸ்ரேட், யாழ். | 8 | 86-90 | 190-00 |
| அந். அருட்பிரகாசம் | பிறஸ் ஸ்ரேட், யாழ்ப்பா. | 12 | 133-80 | 390-00 |

விலாசம்: காரியதரிசி, கரையூர் விவாக இலாபநிதிச் சங்கம்
சந்தியோகுமையோர் கோவில், யாழ்ப்பாணம்.

### பாரதியாரின் கைப்பிரதிகள்

தேசியகவி பாரதியாரின் கையெழுத்துப் பிரதிகளைப் பத்திரமாகப் பாதுகாக்கவும், அவைகளை எல்லோரும் காண வசதியளிக்கவுமாகச் சென்னை நூதனபொருட்காட்சிச்சாலை அதிகாரிகள் முன்வந்திருக்கிறார்கள். கவியின் கையெழுத்துப் பிரதிகளைப் பிரதிமைப் படம்பிடித்து என்றைக்கும் காட்சிக்கு வைப்பதற்கான திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. அவர் தமது கவிதைகளைப் பாடசாலைப் பையன்கள் உபயோகிக்கும் மட்டமானகாகிதங்களைக் கொண்ட நோட்புத்தகங்களிலே வலது கைப்பக்கங்களிலே நீலமையில் மணி மணியாக எழுதியிருக்கின்றார். இந்த அரிய பொக்கிஷம் அடிக்கடி கையாளப்பட்டால் அவைகள் பழுதாகிவிடும் என்பதை உத்தேசித்தே அதிகம்முக்கியமான சந்தர்ப்பங்களில் மட்டும் அவைகளை எடுக்கவும், ஏனையசமயங்களில் கண்ணாடிப்பெட்டியில் வைத்துப் பாதுகாக்கவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. படிக்கவிரும்புகிறவர்களின் வசதியைக்கோரியே அவைகள் பிரதிமைப்படம் பிடிக்கப்படவிருக்கின்றன.

### ஆஸ்தானகவிகள்

"தனது கல்விக்கொள்கைமூலம் மக்களின் எதிர்காலத்திற்கும், தேசநலனுக்கும் தகுதியான அஸ்திவாரத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதே சென்னை அரசினரின் அவாவாகும்" என்று ஆஸ்தானகவிகளுக்கு விருதுகள்அளிக்க நடைபெற்ற தர்பாரில் பேசிய சென்னைக் கல்விமந்திரி திரு. மாதவ மேனன் அவர்கள் கூறலாயினர். சென்னை அரசினர் நியமித்துள்ள ஆஸ்தானகவிகளுக்கு விருதுகள் வழங்கச் சென்னைத் தேசாதிபதி அவர்கள் சென்ற 15-ந்திகதி மாலை நடத்திய தர்பார் சிறப்பாக நடந்தேறியது. ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு நீதியரசர்களும், அரசாங்க அதிகாரிகளும், கல்வி, கலைத்துறை மேதைகளும், பலபிரமுகர்களும் சமுகமளித்திருந்தார்கள். கவிஞர்களை ஆஸ்தான கவிகளாக்கி, அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி விருதுகள் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கும்இவ்விழா பண்டைக்கால மன்னர்களின் ஆட்சியையும், சரித்திரம்புகழும் அன்னார் பெருங்குணங்களையும் நினைவுறுத்துவதாக இருந்தது. தமிழ்க்கவி நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, தெலுங்குக்கவி சதாவதானி வெங்கடசாஸ்திரி காரு, மலையாளக்கவி வள்ளத்தோல் நாராயணமேனன், கன்னடகவி எம். கோவிந்தபாய் மஞ்ஜேஷ்வர், சமஸ்கிருத கவி கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் என்பவர்களே புதிய ஆஸ்தான கவிகளாவர். இவர்களுக்குப் பொன்னாடைபோர்த்தித் தேசாதிபதியவர்கள் விருதுகள் வழங்கினர். ஐந்துவருஷ காலத்திற்கு வருடந்தோறும் இவர்களுக்கு ஆயிரம்ரூபா அளிப்பதென்ற அரசாங்கத்தினரின் முடிபுக்கிணங்கப் பணமுடிப்புகளை இந்த ஆஸ்தான கவிகளுக்குச் சென்னைப்பிரதமர் பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள் அளித்தனர்.

### துணிகர வழிபறிகொள்ளை

யாழ்ப்பாணப்பட்டினத்திலே ஓட்டுமடச்சந்தியிலிருந்து சொற்பதூரத்திலே சென்ற 22-ந்திகதி இரவு ஆயுதபாணிகளான திருடர் நடத்தியதிருட்டு எவருக்குமே திகைப்பை உண்டுபண்ணுவதாயிற்று. அன்றிரவு 10 மணியளவில் நல்லூர்ச் சப்பரத்திருவிழா வைக்கண்டுகொண்டு மூன்று பெண்களும் ஒருஆடவரும் மாட்டுவண்டி ஒன்றில் அராலி—வட்டுக்கோட்டைத் தெருவாலே காரைநகரிலுள்ள தங்கள் வீட்டுக்குத் திரும்பிப்போகையில், ஓட்டுமடச்சந்திக்குச் சற்றுத் தூரத்திலே ஆயுதபாணிகளான வழிபறிதிருடர்கள் குறுக்கிட்டு வண்டிக்காரனையும், பெண்களையும் பிடித்தடித்து, அப்பெண்கள் அணிந்திருந்த 4,000 ரூபா பெறுமதியான ஆபரணங்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்டு தப்பிவிட்டார்கள். காயமடைந்த பெண்களும், வண்டிக்காரனும் யாழ்ப்பாண ஆஸ்பத்திரி கொண்டுவந்து சேர்க்கப்பட்டார்கள்.

### நெல்விளைவு இருமடங்காகுமா?

தற்போது இலங்கையிலே வருடம் ஒன்றுக்கு ஒன்றரைக்கோடி புசல்நெல் விளைவிக்கப்படுவதாக மதிப்பிடப்படுகிறது. ஆனால், தாம்கூறும்முறைகள் கையாளப்படின் இந்தவிளைவு இருமடங்காக்கப்படலாமென்று கமத்துறை உபஏசன்றரான திரு. சி. பி. டி. சில்வா கூறுகின்றார். மழைகாலத்தில் எல்லா நெல்வயல்களும் பூரணமாக விதைக்கப்பட்டு, பின்னர்கோடை காலத்தில் அவற்றிலே பாதிவயல்கள் விதைக்கப்பட்டால் வருடத்திலே 15 லட்சம் ஏக்கர் விஸ்தீரணமானவயல்களில் நெல்லு வெட்டலாம். மேலும் தற்போது ஏக்கருக்குப் 15 புசல் நெல் விளைகின்றது. இது 20 புசலாக்கப்பட்டால் வருடத்திலே மூன்று கோடி புசல்நெல்விளைவிக்கலாம. தக்க காலத்திலே இரும்புக் கலப்பைகள் கொண்டுஉழுவதாலும், புல்அழுகிமண்ணோடுகலக்கப்போதியகாலம் கொடுத்துப் பிறகு விதைப்பதாலும் விளைவைப் பெருக்கலாம். நெற்பயிர்கள் முளைத்து வரும்போது மற்றோர்முறையும் உழப்படவேண்டும். இவ்விருமுறைகளும் கையாளப்பட்டால் வயலுக்குப்பசளை போட்டாலென்ன, போடாவிட்டாலென்ன விளைவு அதிகரிக்குமென்று அவர் கூறுகின்றார்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கேட்டமன்றாட்டு கிடைத்தது. ரூ. 1-00
மன்னார்


### வேத புஸ்தகங்கள்

| | |
|---|---|
| அர்ச். கூரேதார்சின்சரித்திரம் | 2-00 |
| ஞானமிர்த தடாகம் | 2-75 |
| ஞானஉபதேச தடாகம் | 2-75 |
| பிரதானமந்திரங்களின் வியாக்யானம் | 2-25 |
| தேம்பாவணி (3 காண்டம்) | 15-50 |
| திருவருஷம் | 3-75 |
| மாதாவின் மாலை ஆராதனை | 0-25 |

தாமஸ்ரோட்றீகோ அன்சன்ஸ்,
புத்தகவியாபாரிகள்,
கொழும்பு—13.


Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 1 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org